தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

18.06.2013 A.M

## விண்ணைத் தொடும் விலைவாசி... விழி பிதுங்கும் மக்கள்...



காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருள்களின் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருவதால் சமீபகாலமாக நடுத்தர மக்களின் நுகர்வுத் திறன் குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மழைக் குறைவு, விளைச்சல் இல்லை, டீசல் விலை உயர்வு என பல்வேறு காரணங்களால் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உச்சத்தில் சென்றுவிட்டது.

கடந்த சில மாதங்களில் மட்டும் மளிகைப் பொருள்களின் விலை 25 சதவீதமும், காய்கறிகளின் விலை 50 சதவீதமும் உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

பருப்பு வகைகள், அரிசி மற்றும் வெங்காயம் உள்ளிட்டவை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காகவே, அதனை மொத்த வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்கள் பதுக்கி வைத்துள்ளதாக குற்றம்சாட்டப்படுகிறது.

காட்சிப் பொருளாகும் காய்கறிகள்: மழை இல்லாததால் இந்த ஆண்டு காய்கறிகளின் விளைச்சல் போதிய அளவு இல்லை. இதன் காரணமாக மிகப்பெரிய காய்கறி சந்தையான கோயம்பேடு மார்க்கெட்டில், சமீப காலமாக காய்கறி வரத்து

குறைந்துள்ளது. வரத்து குறைந்ததன் எதிரொலியாக காய்கறிகளின் விலை கடும் உயர்வை சந்தித்துள்ளது.

இதுகுறித்து கோயம்பேடு வியாபாரி செப்ந்தரராஜன் கூறியது: கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட வெளிமாநிலங்களிலிருந்தும், தமிழகத்தில் தஞ்சாவூர், கும்பகோணம், அதிராமபப்பட்டினம், பொள்ளாச்சி, அறந்தாங்கி, தாராபுரம், பல்லடம், பெரம்பலூர் உள்ளிட்ட இடங்களிலிருந்தும் கோயம்பேடுக்கு காய்கறிகள் வருகின்றன.

நாளொன்றுக்கு 350 லாரிகளில் 5250 டன் காய்கறிகள் மார்க்கெட்டுக்கு வரும். ஆனால் தற்போது 150 லாரிகளில் 2250 டன் காய்கறிகள் மட்டுமே வருகின்றன.

திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் விளைநிலங்கள் வீட்டுமனைகளானதால், தற்போது அங்கிருந்து 10 சதவீதம் கூட காய்கறி வரத்து இல்லை. இதன் காரணமாக கடந்த ஆண்டை விட 50 சதவீதம் விலை கூடியுள்ளது என்றார் அவர்.

அதிர்ச்சியளிக்கும் அரிசி விலை: காய்கறி விலை விண்ணைத் தொடும் அளவுக்கு அதிகரிக்கிறது என்றால், தென்னிந்தியாவின் பிரதான உணவான அரிசியின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்து வருகிறது.

சில வருடங்களுக்கு முன்பு, ஆரணி, காஞ்சிபுரம், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், மதுரை, திருச்சி, விழுப்புரம் என பல இடங்கள் நெல் சாகுபடியில் தன்னிறைவைப் பெற்றிருந்தன.

தற்போது கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களிலிருந்து நெல் தருவிக்கப்பட்டு, தமிழக மக்களின் தேவைக்கு அரிசி உற்பத்தி செய்யப்படும் சூழல் உருவாகியுள்ளது.

இதன்காரணமாக கடந்த ஆண்டை விட அரிசி விலை 25 சதவீதம் உயர்ந்துள்ளது.

இது குறித்து வியாபாரிகள் சிலர் கூறியது: அரிசி மற்றும் மளிகைப் பொருள்கள் விலை ஆண்டு தோறும் ஓரளவு அதிகரிப்பது வழக்கமான ஒன்றுதான். ஆனால் இந்த ஆண்டு எதிர்பார்க்காத அளவுக்கு உயர்ந்துள்ளது.

நுகர்வு குறைந்தது: அதிக விலைக்கு பொருள்கள் விற்கப்படுவதால், நடுத்தர மக்களின் வாங்கும் திறன் குறைந்துள்ளது. மாதத்திற்கு 10 கிலோ அரிசி வாங்கும் வீட்டில், தற்போது 8 கிலோ அரிசி மட்டுமே வாங்குகின்றனர். கூடுதலாக 2 அல்லது 3 கிலோ கோதுமை, ராகி வாங்கிச் செல்கின்றனர். வரும் காலங்களிலும் விலை அதிகரிக்கவே வாய்ப்பு அதிகம் உள்ளது.

பதுக்கல் காரணமா?: விளைச்சல் குறைவால் காய்கறி, மளிகைப் பொருள்கள் ஓரளவு விலை உயர்ந்தாலும், அதைப் பயன்படுத்திக் கொண்டு சில இடைத்தரகர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் வெங்காயம், பருப்பு மற்றும் அரிசி வகைகளை பதுக்கி வைத்துள்ளதாக குற்றம்சாட்டப்படுகிறது.

இது சந்தையில் அந்தப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்குவதுடன், விலை உயர்வுக்கும் வழிவகை செய்யப்படுகிறது.

இவற்றைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே விலைவாசியை ஓரளவு குறைக்க முடியும் என்கின்றனர் சிறு வியாபாரிகள்.

தொழில் மாறிய விவசாயிகள்: கடந்த சில வருடங்களாக விவசாய நிலங்கள் அதிக அளவில் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை தொடர்ந்தால் வரும் காலங்களில் கடும் உணவுத் தட்டுப்பாடு நிலவும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

விவசாயிகளின் வாழ்வுக்கு பாதுகாப்பு இல்லாததால், அவர்கள் நிலத்தை விற்றுவிட்டு, நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வது தற்போது அதிகரித்து வருகிறது.

இது குறித்து சில விவசாயிகளிடம் கேட்டபோது அவர்கள் கூறியது: விவசாயத்துக்கென மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கும் பல திட்டங்கள் எங்களுக்கு வந்து சேருவதில்லை.

விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தினால் விவசாய நிலங்களுக்கு வேலை செய்ய ஆள்கள் கிடைப்பதில்லை.

இந்த பிரச்னைகளில் அரசு தலையிட்டு தீர்த்தால் மட்டுமே விவசாயிகளைக் காப்பாற்ற முடியும் என்றனர்.

## வானிலை அடிப்படையிலான பயிர்காப்பீடு: முன்னோட்டமாக 19 மாவட்டங்களில் அமல்

வானிலை அடிப்படையிலான பயிர்காப்பீடு திட்டத்தை முன்னோட்டமாக, 19 மாவட்டங்களில் அமல்படுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

இது குறித்து வேளாண்மைத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: 2013-ஆம் ஆண்டில் தென்மேற்கு பருவமழை பொழிய தொடங்கியுள்ள நிலையில், ஆங்காங்கே விதைப்புப்பணிகள் தொடங்கியுளன. இந்நிலையில், கர்நாடகத்தில் வானிலை அடிப்படையிலான பயிர்காப்பீடு திட்டத்தை சோதனைமுயற்சியாக அமல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. பயிர்காப்பீடு திட்டத்தின்கீழ் 19 பயிர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை: கேழ்வரகு, மக்காசோளம்,சோளம், துவரை, உளுந்து, பயித்தம்பருப்பு, சோயா, சூரியகாந்தி, நிலக்கடலை, வெங்காயம், பருத்தி, உருளைக்கிழங்கு, மிளகாய், நீர்ப்பாசனமுள்ள பகுதிகளில் விளையும் திராட்சை, சிறுவெங்காயம், பருத்தி, உருளைக்கிழங்கு, மிளகாய். இந்த திட்டம் 19 மாவட்டங்களில் உள்ள 3,333 ஒன்றியங்களில் மட்டும் அமல்படுத்தப்படுகிறது.

பயிர்காப்பீடு திட்டத்தை 6 பொதுகாப்பீடு நிறுவனங்கள் செயல்படுத்தும். பயிர்க்கடன் வாங்குவோர், பயிர்காப்பீடு பெற்று இந்த திட்டத்தில் பங்கேற்பது கட்டாயம். ஆனால் இந்த விவசாயிகள், தேசிய பயிர்காப்பீடு திட்டத்தில் பங்கேற்கமுடியாது. ஆனால், பயிர்க்கடன் பெறும்விவசாயிகள், இருகாப்பீடு திட்டத்திலும் பதிவு செய்ய வேண்டும். பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் இந்த திட்டத்தில் பங்கேற்க, அருகாமையில் உள்ள வங்கிகளை தொடர்புகொள்ள வேண்டும். விண்ணப்பத்துடன்,நிலபட்டா விவரங்களை கொண்டு செல்ல வேண்டும். வங்கியில் கணக்கு தொடங்கி, பயிர்காப்பீடு தவணை தொகையை கட்டிவிட வேண்டும். இந்த பயிர்காப்பீடு திட்டத்தில் பங்கேற்க ஜூலை 31-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும்விவரங்களுக்கு அருகாமையில் உள்ள விவசாயிகள் தகவல் மையங்களை அணுகலாம். இந்த திட்டத்தை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தி கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பருத்தி, மக்காச்சோளம், வெங்காய சாகுபடி பயிற்சி பெறலாம்

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஜூன் 21-ம் தேதி நடைபெற உள்ள பருத்தி, மக்காச்சோளம், வெங்காய சாகுபடி குறித்து விவசாயிகள் பயிற்சி பெறலாம்.

இதுகுறித்து அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ஜெ. கதிரவன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர் வரும் ஆடிப்பட்டத்தில் மானாவாரிப் பயிர்களாக பருத்தி, மக்காச்சோளம், இறவை பயிராக வெங்காயம் சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராகின்றனர். இந்த சூழலில் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையமானது மேற்கண்ட பயிர்களின் நவீன சாகுபடி தொழில்நுட்பம் குறித்து ஜூன் 21ம் தேதி பயிற்சி அளிக்க உள்ளது.

இதில் பயிர்களில் நடவு முதல், அறுவடை வரை காணொளிக்காட்சி, செயல் விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளது.

இதில் பங்குபெற ஆர்வமுள்ள விவசாயிகள் நேரடியாக அல்லது (04328-293251, 293592), வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் இரா. வசந்தகுமாரை (8220851314) ஆகிய எண்களில் தொடர்புகொண்டு பெயர்களை பதியலாம். குறிப்பிட்ட அளவிலான விவசாயிகளுக்கே பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

## "மா விவசாயிகள் பழக்கூழ் தயாரிக்க வேண்டும்'

வேதாரண்யம் பகுதியில் அதிகமாக விளையும் மாம்பழங்களைக் கொண்டு பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

வேதாரண்யத்தை அடுத்த கத்தரிப்புலம் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக நிறுவனமான வேளாண் அறிவியியல் நிலையம் சார்பில் தென்னை சாகுபடி பயிற்சி கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கத்தை தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

காடுகள் அதிகம் உள்ள நாகை மாவட்டத்தில் விவசாயத்தை தொழில் முறையில் மேற்கொள்ள வேண்டும். மண்பரிசோதனை செய்து அதற்கு ஏற்ப உரிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி தென்னை சாகுபடி செய்தால் அதிக லாபம் கிடைக்கும். தற்போது இளநீர் தேவை அதிகரித்து வருகிறது. இதனை ஈடுசெய்ய உயர் தொழில் நுட்பங்களும், உயர் ரக தென்னை கன்றுகளும் நல்ல பயனை அளித்து வருகின்றன.

வேதாரண்யம் பகுதியில் அதிக அளவில் உள்ள மா மரங்களிலிருந்து கிடைக்கும் பழங்களைக் கொண்டு பழக்கூழ் தயாரித்து சந்தையில் விற்பனைக்கு கொண்டு வரும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட வேண்டும் என்றார் முனுசாமி.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி, மண்டல இயக்குநர் ஹேமசந்த்ரா, விரிவாக்கக் கல்வி இயக்குநர் கா.அ. பென்னுசாமி, தென்னை ஆராய்ச்சி நிலையத் தலைவர் சே. மோகன்தாஸ், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் இரா. ராசேந்திரன், வேளாண் இணை இயக்குநர் உ. ராசேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கடம்பூர் மலைப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு நடவுப் பணி தீவிரம்

கடம்பூர் மலைப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்ய நடவுப் பணிகள் துவங்கியுள்ளன.

சத்தியமங்கலம் வனக்கோட்டம் கடம்பூர், கரளையம், எக்கத்தூர், சுஜில்குட்டை, கோட்டமாளம், மாக்கம்பாளையம், பவளக்குட்டை, இருட்டிபாளையம் மற்றும் அணைக்கரை உள்ளிட்ட மலைக் கிராமங்களில் மானாவாரி முறையில் மரவள்ளிக் கிழங்கு, மக்காச்சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. பெரும்பாலும் பழங்குடியின மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடம்பூர் மலைப்பகுதி செம்மண் நிலமாக இருப்பதால், மரவள்ளி ஏக்கருக்கு 12 டன் வரை மகசூல் கிடைக்கிறது. வறட்சியை தாங்கக்கூடிய 10 மாத பயிரான மரவள்ளி சாகுபடிக்கு குச்சி நடவு செய்யும் பணி வைகாசி மாதம் துவங்கியது.

கடந்த சில நாள்களாக பெய்த மழையை பயன்படுத்தி பவளக்குட்டை, கல்கடம்பூர், இருட்டிபாளையம், பசுவனாபுரம், உகினியம் உள்ளிட்ட பகுதிகளில் மரவள்ளி சாகுபடிக்காக உழவுப் பணி நடைபெற்று வருகிறது.

பருவ மழையைச் சார்ந்து மரவள்ளிக் கிழங்கு சாகுபடி இருப்பதால், மிகவும் கடினமாக உள்ள மண்ணை டிராக்டர் மூலமாக பலமுறை உழுது மண்ணை நயமாக்குவதால் சாரல் மழைகூட வேர் மண்டலம் வரை சென்று பயிருக்கு நீர் ஊறிஞ்சும் தன்மையை அதிகரிக்கும் என பழங்குடியினர் தெரிவித்தனர்.

பயிர் வளர்ச்சிக்காக செம்மண்ணை நன்றாக உழுது வளமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மாத,த் துவக்கத்தில் பெய்த மழையை பயன்படுத்தி ஆயிரக்கணக்கான ஏக்கரில் நடவு செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்கு ஓரளவு வளர்ந்து செடியாக காணப்படுகிறது.

தற்போது, செடிகளுக்கு இடையே வளர்ந்த களைகளை அகற்றும் பணியில் பழங்குடியினர் ஈடுபட்டு வருகின்றனர். நாமக்கல் மாவட்டம் ராசிபுரம், நாமகிரிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இயங்கும் ஜவ்வரிசி ஆலைகளுக்காக மரவள்ளிக் கிழங்குகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

## பம்மல் நகராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

பம்மல் நகராட்சியில் பொதுமக்களுக்கு மழைநீர் சேகரிப்பு குறித்தும், வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதின் அவசியம் குறித்தும் விழிப்புணர்வுப் பேரணி திங்கள்கிழமை நடைபெற்றது.

இப்பேரணிக்கு பம்மல் நகர்மன்றத் தலைவர் சி.வி.இளங்கோவன் தலைமை வகித்தார். இந்தப் பேரணியில் பள்ளி மாணவர்கள் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த பல்வேறு வாசகங்கள் கொண்ட பதாகைகளுடன் முக்கியச் சாலைகளில் ஊர்வலமாகச் சென்றனர்.

பின்னர் பம்மல் நகர்மன்றத் தலைவர் சி.வி.இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறியது: மழைநீர் சேகரிப்பின் மூலம் கிடைக்கும் பயன்களைக் கருத்தில் கொண்டு, மழைநீர்

சேகரிப்புத் திட்டத்தைத் தமிழகத்தில் முதன் முதலாக செயல்படுத்தியவர் ஜெயலலிதா ஆவார்.

தமிழக முதல்வரின் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

புதிதாக கட்டட அனுமதி பெற, மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு அமைப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

வீடுகள்,வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் ஏற்கெனவே உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு சரியாக அமைக்கப்பட்டுள்ளதா என்பதை மறு ஆய்வு செய்த பிறகு, சொத்து வரி விதிப்பு, குடிநீர் இணைப்புக்கு அனுமதி வழங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விரைவில் பம்மல் நகராட்சியில் வீடுவீடாகச் சென்று இவற்றை கண்காணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

பம்மல் நகராட்சி ஆணையர் பி.வி.ரவிச்சந்திரன், துணைத் தலைவர் பி.அப்பு வெங்கடேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## "விவசாயிகள் சங்க மாநாட்டை விளக்கி மாநிலம் முழுவதும் பிரசாரம்'

கடலூரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள விவசாயிகள் சங்க மாநாட்டை விளக்கி ஜூன் 25 முதல் 30-ஆம் தேதி வரை தமிழகம் முழுவதும் பிரசாரம் நடைபெறும் என்று எம்எல்ஏ கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது மாநாடு, கடலூரில் ஜூலை 24 முதல் 27 வரை நடைபெற உள்ளது. இம்மாநாட்டை நடத்துவது குறித்து மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் சிறப்பு பேரவைக்கூட்டம், கடலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாநிலக்குழு உறுப்பினர் மூசா தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் டி.ஆறுமுகம் மாவட்டக்குழு முடிவுகளை விளக்கி பேசினார். மத்தியக்குழு உறுப்பினரும் எம்எல்ஏவுமான கே.பாலகிருஷ்ணன் மாநாட்டு நிதியை பெற்றுக்கொண்டு பேசினார்.

அவர் பேசியது: கடலூரில் நடைபெறும் விவசாயிகள் சங்க மாநாட்டையொட்டி தமிழகம் முழுவதும் 23 இடங்களில் கருத்தரங்கங்கள் நடைபெற்று வருகின்றன. மாநாட்டின் நோக்கங்களை விளக்கும் வகையில் ஜூன் மாதம் 25 முதல் 30 வரை தமிழ்நாடு முழுவதும் விவசாய சங்க கொடியினை ஏற்றி பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

மாநாட்டையொட்டி தமிழகத்தின் 5 முனைகளிலிருந்து கொடி, ஜோதி பயணங்கள் புறப்பட்டு பல்வேறு மாவட்டங்கள் வழியாக பிரசாரம் மேற்கொண்டு மாநாட்டை அடையும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட செற்குழு உறுப்பினர்கள் எஸ்.தனசேகரன், வி.முத்துவேல், வி.உதயகுமார், ஜி.மாதவன், எஸ்.வாலண்டினா, எஸ்.ஜி.ரமேஷ்பாபு, பி.கருப்பையன், வி.சுப்புராயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 21-ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகளின் குறைதீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை(ஜூன் 21) நடக்கிறது.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் காலை 10.30 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையில் கூட்டம் நடக்கிறது.

அரசுத் துறை அலுவலர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

கடலூர் மாவட்ட விவசாயிகள், விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு, விவசாயம் சார்ந்த குறைகளையும் கோரிக்கைகளையும் தெரிவிக்கலாம். எழுத்துப்பூர்வமான கோரிக்கை மனுக்களையும் அளிக்கலாம்.

இத்தகவல் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

மாமல்லபுரம் சிறப்பு நிலை பேரூராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

பேரூராட்சி செயல் அலுவலர் வ.மணி பேரணியைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். மாமல்லபுரம் பேரூராட்சி கங்கைகொண்டான் மண்டபத்தில் தொடங்கி, பஸ் நிலையம், அர்சுனன் தபசு, கடற்கரைக் கோயில், ஐந்து ரதம் உள்ளிட்ட முக்கிய இடங்கள் வழியாக நடைபெற்றது.

பேரூராட்சித் தலைவர் எம்.கோதண்டபாணி, துணைத் தலைவர் தேவேந்திரன், சுகாதார மேற்பார்வையாளர் செல்வராஜ், பள்ளி மாணவ மாணவிகள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, மம்சாபுரம் பேரூராட்சியில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி அனைத்து வார்டுகளிலும் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்க விழா, பேரூராட்சித் தலைவர் ரா. ராஜா தலைமையில், துணை தலைவர் ப. அய்யனார் முன்னிலையில் நடைபெற்றது. செயல் அலுவலர் பா. ஜெயச்சந்திரசேகரன் கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறியதாவது: 1920-ஆம் ஆண்டு, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப்படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்பட்ட தனியார் மற்றும் பிற கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லை எனில், அக்கட்டமைப்பை ஏற்படுத்தும் வரை அந்தக் கட்டடத்துக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மம்சாபுரம் பேரூராட்சிக்குள்பட்ட பகுதியில் ஜூன் மாத இறுதிக்குள் மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்தாத கட்டடங்களுக்கு பேரூராட்சி மூலம் மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதற்குரிய தொகை 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப்படி வசூலிக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் பல்வேறு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஏற்பாடுகளை செயல் அலுவலர் பா. ஜெயச்சந்திரசேகரன் செய்திருந்தார்.

## மேற்குத் தொடர்ச்சி மலையில் 1000 ஹெக்டேரில் மழை நீர் சேகரிப்பு குட்டைகள் அமைக்க ரூ. 1 கோடி ஒதுக்கீடு

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் வகையில் நீர் ஆதார பகுதிகளில் 1000 ஹெக்டேர் சமதள பரப்பளவில் வனத்துறை மூலம் மழைநீர் சேகரிப்பு குட்டைகள் அமைக்க ரூ. 1 கோடி அரசு ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளதாக மண்டல வனப்பாதுகாவலர் அஜிஸ்குமார் ஸ்ரீவத்ஸவா தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலையில் புலி, காட்டுப் பன்றிகள், மான்கள் உள்ளிட்ட வனவிலங்குகள் அதிகம் உள்ளன. இவைகளை பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், நீர் ஆதாரப் பகுதிகளை உருவாக்கும் வகையில் வனத்துறை மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது, வன விலங்குகள் அனைத்தும் மலைப்பகுதியில் போதிய மழை பெய்யாத நிலையில் நீர் குட்டைகளில் தண்ணீர் இல்லாததாலும், இரை கிடைக்காததாலும் மலை அடிவாரப் பகுதிகளில் உள்ள விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்து விடுகின்றன. இதுபோன்ற காரணங்களால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே இந்த விலங்குகளை கட்டுப்படுத்தவும், மலைப்பகுதியில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும் மரக்கன்றுகள் மற்றும் நீர் வளத்தை உண்டாக்கவும் வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன் அடிப்படையில் நிகழாண்டில் மேற்கு தொடர்ச்சி மலையில், நீர் ஆதாரப் பகுதிகளில் 1000 ஹெக்டேரில், தலா 250 ஹெக்டேர் பரப்பில் 4 மழை நீர் சேகரிப்பு குட்டைகள் உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. அதோடு, இக்குட்டைகள் அமைய இருக்கிற பகுதியில் பசுமையான சுற்றுச்சூழலை

உருவாக்கும் வகையில் சுற்றிலும், ஒவ்வொரு 250 ஹெக்டேரிலும், தேக்கு, வேம்பு, மூங்கில், நாவல் உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகளும் நடப்பட இருக்கிறது.

இப்பணிகளை மேற்கொள்வதற்காக அரசு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன் அடிப்படையில் சாப்டூர், தாணிப்பாறை, பிளவக்கல் அணை மற்றும் சேத்தூர் மலைப்பகுதியில் குறிப்பிட்ட இடங்களில் சமதள பரப்புகளைக் கண்டறிந்து, மழை நீர் சேகரிப்பு குட்டைகள் அமைக்கும் பணி தொடங்க இருப்பதாக அவர்தெரிவித்தார்.

## வயலில் கருகும் சோளம்: நஷ்டத்தில் விவசாயிகள்

காங்கயம் பகுதியில் வயலிலேயே சோளப் பயிர் கருகுவதால், விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

காங்கயம், முத்தூர், நத்தக்காடையூர், பழையகோட்டை, குட்டப்பாளையம், மங்களப்பட்டி உள்பட பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கரில் சோளம் பயிர் செய்யப்பட்டுள்ளது. மானாவரி பயிரான சோளப் பயிர் போதிய மழை இல்லாததாலும், அதிக வறட்சியாலும் பயிர்கள் வயலிலேயே காய்ந்து கருகி வருகின்றன.

இதுகுறித்து பாப்பினி பகுதியைச் சேர்ந்த விவசாயி வேலுசாமி கூறியது: மானாவாரியாக விளையக் கூடிய சோளப் பயிர், ஒரு ஏக்கர் பயிர் செய்ய சுமார் ரூ.3 ஆயிரம் செலவாகிறது. 4 மாதம் விளையும் இந்தப் பயிரை மழையை நம்பியே விதைக்கிறோம். ஆனால் பருவ மழை சரியாக பெய்யவில்லை. இதன் காரணமாக சோளப் பயிர் கருகிவிட்டது.

கடந்த மாதத்தில் இரண்டு மழை நன்றாக பெய்திருந்தால்கூட இந்தப் பயிரை காப்பாற்றி இருக்க முடியும். ஆனால் ஒரு மழை கூட இப்பகுதியில் பெய்யாததால், சோளம் முழுவதும் வயலிலேயே கருகிவிட்டது. இதனால் விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சோளம் விளைச்சல் குறைந்ததால், கால்நடை தீவனங்களுக்கும் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளை பராமரிக்கும் செலவு அதிகரிக்கும்.

இந்த இழப்பை தவிர்க்க அரசு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 41.40 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 41.40 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,386 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.69 டி.எம்.சி.

## குன்னூரில் சாரல் மழை:தேயிலை விவசாயம் அமோகம்

குன்னூரில் பத்து நாள்களாக தொடர்ந்து பெய்துவரும் சாரல் மழை, தேயிலை விவசாயத்துக்கு ஏற்ற வகையில் உள்ளதாக உபாசி வேளாண் பிரிவு தெரிவித்துள்ளது.

குன்னூரில் மூன்று மாதத்துக்கு மேலாக பருவமழை பொய்த்துவிட்டதால், தேயிலைத் தோட்டங்களில் கொழுந்துகள் வாடத் துவங்கின. இதனால் தேயிலை உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது பெய்துவரும் சாரல் மழையால் தேயிலைக் கொழுந்துகள் வளரத் தொடங்கியுள்ளன. இந்த மழையால், தேயிலைத் தோட்டங்களில் கொழுந்துகள் வளர்ச்சி துரிதமாக இருக்கும் என்று உபாசியின் வேளாண்மை மையம் தெரிவித்துள்ளது.

## நீலகிரியில் தீவிரமடையும் தென்மேற்கு பருவமழை!

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதுடன், கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பெய்த மழைப்பொழிவைக் காட்டிலும் நடப்பாண்டில் இரட்டிப்பாகியுள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் உதகை பகுதிகளில் தென்மேற்கு பருவமழையும், குன்னூர் மற்றும் கோத்தகிரி பகுதிகளில் வடகிழக்கு பருவமழையும் அதிகளவில்

இருக்கும். இருப்பினும் பருவநிலை மாற்றங்களால் சில ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க மழைப்பொழிவு இல்லாமல் இருந்து வந்தது.

இதனால், நீலகிரி மாவட்டத்திலேயே குடிநீருக்கும், விவசாயத்துக்கான தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு, நீலகிரியை நம்பியிருந்த சமவெளி மாவட்டங்களும் ஏமாற்றமடைந்தன. இந்நிலையில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு நடப்பாண்டில் நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை குறித்த காலத்தில் தொடங்கியுள்ளது.

குறிப்பாக ஜூன் முதல் வாரத்திலேயே பருவமழை தாக்கம் தென்பட்டதால், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்தாண்டுகளில் உதகை உள்ளிட்ட பகுதிகளில் நிலவிய குடிநீர் தட்டுப்பாட்டால், கடந்த 6 மாதங்களில் 100-க்கும் மேற்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டன.

இந்த நிலைக்கு நடப்பாண்டின் பருவமழை முற்றுப்புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டத்தையொட்டியுள்ள பிற சமவெளிப் பகுதிகளைப்போலவே நீலகிரியிலும் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் நிலவியது.

ஆனால், நடப்பாண்டில் ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து 16 ஆம் தேதி வரை 3,416மி.மீ. மழை பதிவாகியுள்ளது. ஆனால், இதுவே கடந்தாண்டு ஜூன் மாதத்தின் 30 நாள்களில் 2,731 மி.மீ. மட்டுமே இருந்தது. இன்னும் பாதி நாள் எஞ்சியுள்ளது.

குறிப்பாக கடந்த 7 நாள்களில் மட்டும் 1,700 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மேலும் 17 ஆம் தேதி காலை வரையிலான 24 மணி நேரத்தில் 234 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் அதிக அளவாக அவலாஞ்சியில் 521மி.மீ., அப்பர்பவானியில் 325மி.மீ., தேவாலாவில் 300மி.மீ., கூடலூரில் 200 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

உதகையை பொறுத்தவரை 50மி.மீ மழைப்பொழிவு கூட இல்லாவிட்டாலும், உதகையைச் சுற்றியுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையால் நீராதாரங்களுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. மாவட்டத்தின் மற்ற

பகுதிகளைவிட உதகையில் வீசும் பலத்த காற்று, கடும் குளிரால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## 21-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 21-ம் தேதி நடைபெறுகிறது.

இக்கூட்டத்துக்கு ஆட்சியர் பொ.சங்கர் தலைமை தாங்குகிறார். பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கவுள்ளனர்.

கடந்த மாதத்தில் விவசாயிகளிடம் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்தும் தெரிவிக்கப்பட உள்ளது.

## விவசாயத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடிவு

கரூர் மாவட்டத்தில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தினர் ஜூலை 16-ம் தேதி வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர்.

இதுகுறித்து சங்கத்தின் மாவட்டச் செயலர் ஆர். தங்கவேல் தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ். மோகன்குமார், சங்க நிர்வாகிகள் வி. சின்னசாமி, பி. பிச்சைமுத்து, கே. சரவணன் உள்ளிட்டோர் கரூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் சக்திவேலிடம் அளித்த வேலை நிறுத்த குறிப்பாணையில் கூறியுள்ளது:

விவசாயத் தொழிலாளர்களுக்கு தனி ஓய்வூதியச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். தமிழகத்தில் முதல்வர் உழவர் பாதுகாப்புத் திட்டச் செயல்பாட்டில், விவசாயத் தொழிலாளர் சங்கங்களையும் இணைக்க வேண்டும்.

நிலமில்லாத ஏழைகள், விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு வீட்டுமனைக்காக தலா 15 சென்ட் நிலம், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட ரூ. 3 லட்சம் வழங்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த மத்தியச் சட்டத்தை தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 16-ம் தேதி கரூர் மாவட்டத்தில் விவசாயிகள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கரூரில்ஜூன் 21-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

கரூரில் ஜூன் 21-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் ஜூன் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் ஜூன் 21 காலை 10.30-க்கு நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் கரூர் மாவட்ட விவசாயிகள் அளிக்கும் விவசாயம், மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 16.91 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 16.91 அடியாக இருந்தது.அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## வேளாண் கல்லூரி மாணவிகளுக்குப் பயிற்சி

பெரம்பலூர் வட்டாரத்தில், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் வேளாண் துறையின் செயல்பாடுகள் குறித்து அண்மையில் பயிற்சி பெற்றனர்.

பெரம்பலூர் மாவட்ட மண் பரிசோதனை நிலயத்தில், மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர்கள் பச்சியம்மாள், தயாமதி,செங்குட்டுவேல், ஜெயந்தி, கன்னன் ஆகியோர் மண் மாதிரிகளின் பரிசோதனை மேற்கொள்வது குறித்து பயிற்சி அளித்தனர்.

தொடர்ந்து, வேப்பந்தட்டையில் உள்ள பருத்தி ஆராய்சி நிலையம், பெரம்பலூரில் உள்ள ரோவர் வேளாண் அறிவியல் நிலையம், விதைப் பரிசோதனைக் கூடம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, நவீன தொழில்நுட்பங்கள் குறித்துக் கேட்டறிந்தனர்.

பின்னர் பெரம்பலூர் வட்டரத்தில் உள்ள அயிலூர், அரணாரை மற்றும் குரும்பலூர் உள்ளிட்ட கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து, அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தனர்.

இதில் மாணவிகள் சிவகாமி, பிருந்தா, தனபிரியா, ஈஸ்வரி, நஷியா பேகம், ஐஸ்வர்யா, நிரோஷினி, சத்யா, சுபங்கி, சுஜிதா ஆகியோர் பயிற்சி பெற்றனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குநர் சேகர், வேளாண் அலுவலர் ரமேஷ், அலுவலர்கள் இளையராஜா, அருள்செல்வன், சுரேஷ் ஆகியோர் செய்தனர்.

### ஜூன் 20-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (ஜூன் 20) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறைகளை கேட்கும் வகையில் மாதம்தோறும் மூன்றாவது வியாழக்கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஜூன் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜூன் 20-ம் தேதி பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் தலைமையில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாய சங்கத்தினர் கலந்துகொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கவும் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்கக் கோரிக்கை

திருநெல்வேலி மாவட்டத்தில் கார்பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தாமிரவருணி பாளையங்கால்வாய் நீர் பகிர்மானக் குழு உறுப்பினர் ஆர்.கணேசன் ஆட்சியரிடம் அளித்த மனு:

2009 முதல் 2012-ம் ஆண்டு வரை பாளையங்கால்வாய்க்கு முதல் கார்பருவத்துக்கு பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமும் அளிக்கவில்லை. இவ்வாண்டு தற்போது பாபநாசம் அணையில் 77 அடிக்குமேல் நீர்மட்டம் இருக்கிறது.

கடந்த காலங்களில் 40 அடி நீர்மட்டம் இருந்தபோதே அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. வழக்கமாக ஜூன் 1-ம் தேதியே அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுவிடும். ஆனால் இவ்வாண்டு போதிய நீர்மட்டம் இருந்தும் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

அணையில் தண்ணீரை தேக்கி வைத்திருப்பதால் யாருக்கு பயன் ஏற்கெனவே 17 நாள் கடந்துவிட்டது. தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டால் பயிரிடும் பயிர்கள் மழைக்காலத்தில் மழையில் சிக்கி சேதமடையும் வாய்ப்புகள் உள்ளன. எனவே இனியும் தாமதம் செய்யாமல் பாபநாசம் அணையிலிருந்து பாளையங்கால்வாய் உள்ளிட்ட முக்கிய கால்வாய்களில் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாமக மனு: பாமக மாநில துணைப் பொதுச் செயலர் அ. வியனரசு, மாநகர் மாவட்டச் செயலர் சு.ஹரிஹரன், துணைத் தலைவர் ச.கிருஷ்ணகுமார், மாநகர் மாவட்ட இளைஞர் சங்கச் செயலர் சு.மாரியப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஆட்சியரிடம் அளித்த மனு: திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் ஆனிப்பெருந்திருவிழா தேரோட்டம் வரும் 22-ம் தேதி நடைபெறுகிறது. இந்நாளில் எவ்வித இடையூறும் இல்லாத வகையில் பக்தர்கள்

கோவிலுக்கு வந்து தரிசிக்கவும், வீதி வலம் வரும் தேரோட்டக் காட்சிகளைக் காணவும், மாநகரிலுள்ள அனைத்து மதுக்கடைகளையும் மூட வேண்டும்.

மூதாட்டி மனு: நான்குநேரி வட்டம் களக்காடு இடையன்குளம் பகுதியைச் சேர்ந்த புஷ்பம் பொன்னம்மாள் என்ற 80 வயது மூதாட்டி ஆட்சியரிடம் மனு அளித்தார். இடையன்குளம் கிராமப்பகுதியில் தனது பூர்வீக சொத்தாக 6 ஏக்கர் உள்ளதாகவும், போலி கையெழுத்திட்டு அதை அபகரிக்க முயற்சிப்பதை தடுக்க வேண்டும் என்றும் இது குறித்து கேட்டால் கொலை மிரட்டல் விடுப்பவர் மீது நடவடிக்கை எடுக்க போலீஸாருக்கு அறிவுறுத்த வேண்டும் என்று மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நீலகிரியில் தீவிரமடையும் தென்மேற்கு பருவமழை!

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதுடன், கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பெய்த மழைப்பொழிவைக் காட்டிலும் நடப்பாண்டில் இரட்டிப்பாகியுள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் உதகை பகுதிகளில் தென்மேற்கு பருவமழையும், குன்னூர் மற்றும் கோத்தகிரி பகுதிகளில் வடகிழக்கு பருவமழையும் அதிகளவில் இருக்கும். இருப்பினும் பருவநிலை மாற்றங்களால் சில ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க மழைப்பொழிவு இல்லாமல் இருந்து வந்தது.

இதனால், நீலகிரி மாவட்டத்திலேயே குடிநீருக்கும், விவசாயத்துக்கான தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு, நீலகிரியை நம்பியிருந்த சமவெளி மாவட்டங்களும் ஏமாற்றமடைந்தன. இந்நிலையில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு நடப்பாண்டில் நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை குறித்த காலத்தில் தொடங்கியுள்ளது.

குறிப்பாக ஜூன் முதல் வாரத்திலேயே பருவமழை தாக்கம் தென்பட்டதால், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்தாண்டுகளில் உதகை உள்ளிட்ட பகுதிகளில் நிலவிய குடிநீர் தட்டுப்பாட்டால், கடந்த 6 மாதங்களில் 100-க்கும் மேற்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டன.

இந்த நிலைக்கு நடப்பாண்டின் பருவமழை முற்றுப்புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டத்தையொட்டியுள்ள பிற சமவெளிப் பகுதிகளைப்போலவே நீலகிரியிலும் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் நிலவியது.

ஆனால், நடப்பாண்டில் ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து 16 ஆம் தேதி வரை 3,416மி.மீ. மழை பதிவாகியுள்ளது. ஆனால், இதுவே கடந்தாண்டு ஜூன் மாதத்தின் 30 நாள்களில் 2,731 மி.மீ. மட்டுமே இருந்தது. இன்னும் பாதி நாள் எஞ்சியுள்ளது.

குறிப்பாக கடந்த 7 நாள்களில் மட்டும் 1,700 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மேலும் 17 ஆம் தேதி காலை வரையிலான 24 மணி நேரத்தில் 234 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் அதிக அளவாக அவலாஞ்சியில் 521மி.மீ., அப்பர்பவானியில் 325மி.மீ., தேவாலாவில் 300மி.மீ., கூடலூரில் 200 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

உதகையை பொறுத்தவரை 50மி.மீ மழைப்பொழிவு கூட இல்லாவிட்டாலும், உதகையைச் சுற்றியுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையால் நீராதாரங்களுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளைவிட உதகையில் வீசும் பலத்த காற்று, கடும் குளிரால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் சில இடங்களில் இன்று மழை வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று (ஜூன் 18) மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவ மழை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து  கேரளம், ஆந்திரம், கர்நாடகத்தில் பலத்த மழை பெய்து வருகிறது.

கேரளத்தின் உபரி மழை தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் பெய்து வருகிறது. இதைத் தவிர வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மாலையிலிருந்து வால்பாறை, நீலகிரி, சின்னக்கல்லாறு, பொள்ளாச்சி, கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்களில் மழை பெய்து வருகிறது.

அதிகபட்சமாக கோவை மாவட்டம் சின்னக்கல்லாறில் 60 மி.மீ., மழை பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நீலகிரி மாவட்டம் தேவலா, வால்பாறை, பெரியாறு அணை உள்ளிட்ட இடங்களில் 40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. தரைக்காற்று பலமாக வீசக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெயிலின் அருமை வியாதியில் தெரியும்

அக்னி நட்சத்திரம் முடிவுக்கு வந்துவிட்டது, வெயிலின் பாதிப்பும் குறைந்துவிட்டது. மழை பெய்யாதா, குளிர்ந்த சூழல் வராதா என்றே ஏங்குகிறோம்.

ஆம்...இப்போதெல்லாம் நாம் அனைவருமே ஏப்ரல், மே வந்துவிட்டாலே மனதளவில் வெயிலை நினைத்து அஞ்சத் தொடங்கிவிடுகிறோம். வெயில் என்றாலே அதை எதிரிப்படையை விட கொடுமையானதாகவே நினைக்கிறோம்.

சுட்டெரிக்கும் வெயிலில் அலைந்து திரிந்து உழைப்போர் இன்றைக்கும் நம்மில் இருக்கிறார்களே! அவர்கள் வெயிலை என்றைக்குமே வெறுத்ததில்லை. வெயில் வெறுக்கத்தக்கதும் அல்ல.

வெயில் இல்லாவிடில் உலகில் உயிர்களே இல்லை என்பதுதான் உண்மை!

வெயிலில்தானே நமது தாவரங்கள் தமக்குத் தேவையான உணவை (ஸ்டார்ச்), இலைகள் மூலம் உற்பத்திசெய்கின்றன. அந்தத் தாவரங்கள் மூலம் கிடைக்கும் காய்கறிகளைத்தானே நாமும் உணவாக உட்கொள்கிறோம். வெப்பச் சலனம் ஏற்பட்டால்தானே அது மழை பெய்யும் வாய்ப்பை ஏற்படுத்தும்?

அனைத்துக்கும் ஆதாரமானது வெயில் என்பதை உணர்த்துவதற்காக ஹிந்து மதத்தில், "சூரிய நமஸ்காரம்' என்ற பெயரில் கதிரவனை தினமும் காலையில் வணங்கச் சொல்லப்பட்டுள்ளது. இது அறிவியல் பூர்வ உண்மை என்பதை இப்போது அனைத்து மருத்துவர்களும் கூறிவருகிறார்கள். ஐரோப்பியர் வருகைக்கு முன்பெல்லாம் வெயிலைப் பற்றிய அச்சம் நம்மிடம் இருந்ததே இல்லை. கொடைக்கானல் வெப்பத்தையும், கோடை வெயிலையும் சரிசமமாகவே பாவித்து வந்துள்ளோம்.

50 ஆண்டுக்கு முன்பெல்லாம் நம்மவர்கள் குளிர்சாதன வசதியை நினைத்துப் பார்த்ததுண்டா? வீட்டுக்குள் குளிர்சாதனப் பெட்டிகள் இருந்தது உண்டா? பெரும்பாலான வீடுகளில் மின்விசிறிகூட அவசியப்படவில்லை. ஆக, இயற்கை நமது உடலை சூழலுக்கு ஏற்பவே படைத்திருக்கிறது. நமது நாடு வெப்பமண்டலத்தில் இருப்பதால் நமது உடலும் வெப்பத்தைத் தாங்கும் வகையிலே இருந்தது.

ஆனால், நாம் நமது வாழ்க்கைமுறையை மாற்றிவிட்டோம். வெப்பத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும் மரங்களது எண்ணிக்கையைக் குறைத்துவிட்டோம். மனிதத் தலைகளை விட மரங்களின் கிளைகள் அதிகமாக இருக்கவேண்டும் என்பதை மறந்துவிட்டோம். விளைவு நம்மால் இயற்கை வெப்பத்தைக் கூட ஏற்கமுடியாத உடல் அமைப்பினராகிவிட்டோம்.

தென்னை ஓலை, மஞ்சம் புல் ஆகியவற்றிலான கூரை வீடுகளையும் மங்களூர் ஓடு, நாட்டு (சொருகு) ஓடுகளால் கூரை வேய்ந்த மண் சுவரால் ஆன வீடுகளையும் விட்டுவிட்டு சிமென்டை இழைத்துப் பூசிய, டைல்ஸ் பதிக்கப்பட்ட "கொதி அடுப்பு - புறாக் கூண்டு' வீடுகளைக் கட்டிக்கொண்டுவிட்டோம். வாணலியில் வறுபடும் சுண்டெலிகளாக வெந்துபோகிறோம்.

வெப்பம் என்பது வெறும் சுற்றுச்சூழல் மட்டுமல்ல. அது நமது உடலுக்குத் தேவைப்படும் இயற்கை சக்தி. ஆம்... சூரிய வெயில் மூலம் நமது உடல் நமக்குத் தேவையான வைட்டமின் "டி'யை உற்பத்திசெய்கிறது. தோலுக்கு கீழ் உள்ள கொழுப்பில் வெயில்பட்டால் அது வேதிவினையில், வைட்டமின் "டி' ஆகிறது. அதன் மூலம் நமக்குத் தேவையான கால்சியம் கிடைக்கிறது.

உடல் என்பதே பல்வேறு தாதுப் பொருள்களால் ஆனதே! அதன்படி ஒவ்வொரு தாதுவும் அந்தந்த அளவுக்கு இருக்கவேண்டியது அவசியம். இதில் ஏதாவது ஒரு தாது, அளவு குறைந்தாலும் அதற்கேற்ப உடல்நலம் கெடும். தாதுக்களைச் சீர்படுத்தும் வகையிலேயே சிகிச்சை முறையும் உள்ளது. ரத்தத்தில் உள்ள கால்சியத்தின் அளவை வைட்டமின் "டி'யே நிர்ணயிக்கிறது. கால்சியம் அளவு சரியாக இருந்தாலே நமது எலும்பு உறுதியாக இருக்கும். கால்சியம் குறைவால் எலும்பு வலு குறைந்து குழந்தைகளுக்கு "ரிக்கெட்ஸ்' எனும் பாதிப்பும், முதியோருக்கு மூட்டு வலி உள்ளிட்டவையும் ஏற்படும்.

கால்சியம் குறைந்தால் தசை இறுக்கம் மற்றும் நரம்பு வலுவிழத்தல் பாதிப்பு ஏற்படும் என்பதும் மருத்துவர்களது கருத்து.

ஆக வெப்பத்தை நாம் வெறுத்து நிழலில் மட்டுமே வாழ்ந்தால் பல்வேறு உடல் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும்.

முன்பெல்லாம் பள்ளிக்கும், பணிக்கும் நடந்துசெல்லும் வாய்ப்பு இருந்தது. இதனால் நமது உடல் மீது சூரிய ஒளிபட்டது. ஆனால், இப்போதெல்லாம் உடலில் சூரியன் நேரடியாகப் படுவதே அரிதாகிவிட்டது.

சமீபகாலமாக குழந்தை முதல் பெரியவர்கள் வரை சுமார் 75 சதவிகிதம் பேருக்கு வைட்டமின் "டி' குறைபாடால் ஏற்படும் பாதிப்பு அதிகம் இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

முன்பெல்லாம் அறுபது வயதைத் தாண்டியவர்களுக்கு வரும் மூட்டுவலி தற்போது 45 வயதினருக்கே வந்துவிடுகிறது! "வெயிலின் அருமை நிழலில் தெரியும்' என்பது பழமொழி. "வெயிலின் அருமை வியாதியில் தெரியும்' என்பது புதுமொழி!

இன்றைய வேளாண் செய்திகள்

18.06.2013 A.M

---

## மழையால் நெற்பயிர்கள் சேதம்: விவசாயிகள் வேதனை



கடலூர்:கடலூரில் கடந்த வாரம் செய்த மழையால், அறுவடைக்குத் தயாராகி இருந்த நெற்பயிர் முளைப்பு விட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.கடலூர் அடுத்த திருவந்திபுரம் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது திருமாணிக்குழி கிராமம். இப்பகுதியில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. மலையடிவாரத்தின் கீழ் செழிப்பான நிலங்களில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது.ஆழ்குழாய் கிணறு வசதி கொண்ட இந்த நிலத்தில், சொர்ணவாரி பட்டத்திற்காக கடந்த பிப்ரவரி மாதம் நெல் நாற்று வைத்து பராமரித்து வந்தனர். நெல் மணிகள் பிடித்து முதிர்ந்து கதிர்கள் கடந்த வாரம் சாயத் துவங்கியது. அதனையொட்டி விவசாயிகள் இம்மாதம் முதல் வாரத்தில் நெல் அறுவடைப் பணியைத் துவங்கினர்.இந்நிலையில், வங்கக் கடலில் ஏற்பட்ட வெப்பச் சலனம் காரணமாக கடந்த 6ம் தேதி மாலை மாவட்டத்தில் திடீரென காற்றுடன் மழை பெய்தது. அதில் கடலூர் பகுதியில் 21 மி.மீ., மழை பெய்தது. காற்று வேகமாக வீசியதில், திருமாணிக்குழி கிராமத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்களின் கதிர்கள் நிலத்தில்

சாய்ந்தன. தொடர்ந்து மழை பெய்ததால் மாலையிலிருந்து வடிந்த மழை நீர், அடிவாரத்தில் இருந்த நெல் வயல்களில் தேங்கியது. மேலும், 7ம் தேதி இரவும் கனமழை பெய்தது.இதனால், மலை அடிவாரத்தில் இருந்த 10 ஏக்கர் நிலத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் அனைத்தும் நிலத்தில் சாய்ந்த நிலையில், மழை நீர் தேங்கியதால் நெல் மணிகள் தண்ணீரில் மூழ்கின.

அதிர்ச்சியடைந்த விவசாயிகள், அவசரமாக மழை நீரை வாய்க்கால் வெட்டி வடியச் செய்தனர். இருப்பினும், நெல் பயிர்கள் முழுமையாக தண்ணீரில் மூழ்கி நனைந்ததால், அனைத்தும் முளைப்பு விடத் துவங்கின. மேலும், நிலம் ஈரப்பதமாக இருந்ததால் இயந்திரத்தைக் கொண்டு அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.வேறு வழியின்றி ஆட்களை வைத்து அறுவடை செய்தனர். ஆனாலும், பெரும்பாலான நெற்கதிர்கள் நிலத்திலேயே கொட்டிவிட்டன. எஞ்சிய நெல்களும் முளைப்பு விட்டுள்ளதால் இப்பகுதி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இதுகுறித்து அப்பகுதி விவசாயி செல்வராஜ் கூறுகையில், "சொர்ணவாரி பட்டத்திற்கு தை மாதம் நாற்று விட்டு, சித்திரை மாத இறுதியில் அக்னி நட்சத்திரத்தின் போது அறுவடை செய்வோம். இந்தாண்டு, சற்று தாமதமாக மாசி மாத இறுதியில் நாற்று விட்டோம். இதனால், அறுவடை தள்ளிப்போனது.
நெல்பயிரில் நல்ல மகசூல் இருந்தது. 7ம் தேதி அறுவடை செய்ய திட்டமிட்டிருந்தேன். அதற்குள், 6ம் தேதி மாலை வீசிய காற்றில் நெற்கதிர்கள் மண்ணில் சாய்ந்தன. தொடர்ந்து பெய்த மழையில் நெற்கதிர்கள் நனைந்து முளைப்பு விட்டு விட்டன. இதனால் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
இதுகுறித்து வேளாண் அதிகாரிகளை தொடர்பு கொண்டு இழப்பீடு கேட்டதற்கு, பகுதி சேதத்திற்கு இழப்பீடு வழங்க முடியாது எனக் கூறி விட்டனர்' என்றார் வேதனையுடன்.

### தோட்டக்கலைத் துறை சார்பில்நுண்ணீர் பாசன கருத்தரங்கு

சங்கராபுரம்:மாவட்ட தோட்டக் கலைத்துறை சார்பில் சங்கராபுரம் ரோட்டரி மண்டபத்தில் நுண்ணீர் பாசன கருத்தரங்கம் நடந்தது. ஒன்றிய சேர்மன் அரசு தலைமை

தாங்கினார். ஒன்றிய சேர்மன் ராஜசேகர் முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராசு வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குனர் சேகர், இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் பாலச்சந்திரன், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் விக்ரமன், வேளாண் பொறியியல் துறை செயற் பொறியாளர் மணி, திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சாத்தையா,உதவி பேராசிரியர் அன்புமணி பேசினர்.தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜாமணி நன்றி கூறினார்.

### மரவள்ளி கிழங்கு கொள்முதல் நிலையம் திறக்க கோரிக்கை

சங்கராபுரம்:சங்கராபுரத்தில் மரவள்ளி கிழங்கு கொள்முதல் நிலையம் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சங்கராபுரம் மற்றும் அதனை சுற்றி உள்ள அரசம்பட்டு,பாலப்பட்டு, லக்கினாய்கன்பட்டி, மூலக்காடு, வஞ்சிக்குழி, சேராப்பட்டு, குளத்தூர் உட்பட பல கிராமங்களில் மரவள்ளி கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். முள்வாடி, ரோஸ், குங்குமரோஸ், பாண்டி பெருமாள் ரகங்கள் அதிகளவில் பயிர் செய்கின்றனர். மர வள்ளி கிழங்கு மூலம் மாவு, ஜவ்வரிசி தயாரிக்கப்படுகிறது. தற்போது மரவள்ளி கிழங்கு அமோக விளைச்சல் கிடைக்கிறது. விவசாயிகள் அறுவடை செய்த மரவள்ளி கிழங்குகளை லாரிகள் மூலம் ஆத்தூர், தலைவாசல் சென்று விற்பதால் போக்குவரத்து செலவு, வீண் அலைச்சல் ஏற்படுகிறது. 24 மணி நேரத்திற்குள் கிழங்குகளை விற்பனை செய்யவில்லை என்றால் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது.சங்கராபுரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிகளவில் பயிர் செய்யப்படும் மரவள்ளி கிழங்குகளை பெற்றுக் கொள்ள நேரடி கொள்முதல் நிலையத்தை சங்கராபுரம் பகுதியில் அமைக்க வேண்டும்.

### சின்னசேலம் விவசாயிகள்நெல் பயிரிடுவதில் ஆர்வம்

சின்னசேலம்:சின்னசேலம் பகுதி விவசாயிகள் நெல் பயிடுவதற்கு தயாராகி வருகின்றனர்.சின்னசேலம் தாலுகாவில் தொட்டியம், எலவடி, கூகையூர், கல்லாநத்தம், பூசப்பாடி உள்ளிட்ட 85 கிராமங்கள் உள்ளது. அனைவரும் விவசாயத்தை முக்கிய தொழிலாக செய்கின்றனர். தொடர்ந்து ஒரு வாரமாக மழை பெய்வதால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து கிணற்றில் தண்ணீர் அதிகரித்துள்ளது. இதனால் குறுவை நெல் பயிரிட

விவசாயிகள் தயாராகி வருகின்றனர். வயல்களில் இயற்கை உரமாக பயன்படும் தக்கா செடிகளை விதைத்துள்ளனர்.ஏரி அருகில் உள்ள வயல்களை நெல் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். இந்த பட்டத்தில் நெல் விளைச்சல் அதிகமாக இருக்கும் என்பதால் அனைத்து விவசாயிகளும் நெல் பயிரிட நாற்று விட்டுள்ளனர். தொடர்ந்து மழை பெய்தால் நெல் அறுவடை செய்யலாம். இல்லை என்றால் நெல் பயிர்கள் கருகிவிடும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

### வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி

விழுப்புரம்:விழுப்புரத்தில் புதிய வேளாண் அலுவலர்களுக்கு உர தரக்கட்டுப்பாடு குறித்து பயிற்சி முகாம் நடந்தது.புதியதாக பெறுப்பேற்ற 25 வேளாண் அலுவலர்களுக்கு, உர தரக்கட்டுப்பாடு பயிற்சி முகாம் விழுப்புரம் கலெக்டர் அலுவலக வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் தலைமை தாங்கி பயிற்சியை துவக்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) சண்முகம் சிறப்புரையாற்றினார்.உர மாதிரி எடுப்பது, பதிவேடுகள் பராமரிப்பது, உரங்களை ஆய்வு செய்வது குறித்து வேளாண் துணை இயக்குனர் ஞானவேல் பயிற்சியளித்தார். வேல்முருகன் பெர்டிலைசர் உர நிறுவன நிர்வாக இயக்குனர் சீனுவாசகுமார் பேசினார். வேளாண் உதவி இயக்குனர் தாமோதரன், வேளாண் அலுவலர்கள் சவுந்தரராஜன், அரிகிருஷ்ணன், வேதவள்ளி, ஜானகிராமன் பங்கேற்றனர்.

### இறைச்சி கோழி வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

பள்ளிப்பட்டு:கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக, விவசாய நிலங்களில், கோழிப் பண்ணைகள் அமைத்து, இறைச்சி கோழி வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கூலியாட்கள் தட்டுப்பாடு

பள்ளிப்பட்டு பகுதியில், போதிய அளவு நிலத்தடி நீர் இருப்பதால் நெல், கரும்பு போன்ற பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தண்ணீர் இருந்தும், விவசாயத்திற்கு

கூலியாட்கள் கிடைப்பது குதிரை கொம்பாக உள்ளது.

இதனால் அப்பகுதியில் உள்ள சில விவசாயிகள், தங்கள் விவசாய நிலங்களில் சிமென்ட் மேற்கூரை கூடாரம் அமைத்து, இறைச்சி கோழி வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு என, அவர்கள் முதலீடு செய்வது கிடையாது. கோழி வளர்க்க தேவையான சிமென்ட் மேற்கூரை கூடாரங்கள் அமைக்க, வங்கிக் கடன் கிடைப்பது அவர்களின் கூடுதல் ஆர்வத்திற்கு காரணமாக அமைகிறது.

கூடாரம் அமைத்த பிறகு சோளிங்கர், ஆற்காடு பகுதியில் உள்ள வெளிநாடுகளுக்கு இறைச்சி கோழிகளை ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனங்களை அணுகுகின்றனர். அவர்களிடம் கோழிக் குஞ்சுகளை பெற்று, இரண்டு மாதங்கள் வளர்ந்த பிறகு அவர்களிடமே விற்று விடுகின்றனர்.

முன்பணம் தேவையில்லை

பொதட்டூர்பேட்டை சேர்ந்த விவசாயி கோபி கூறியதாவது:

விவசாய நிலத்தில், 20 அடி அகலம், 140 அடி நீளத்தில் கூடாரம் அமைத்தால் போதும். இதில், 6,000 முதல், 7,000 கோழிகள் வரை வளர்க்க முடியும்.

இறைச்சி கோழி ஏற்றுமதி நிறுவனங்கள் கோழிக் குஞ்சு, உபகரணங்கள் மற்றும் தீவனத்தை எந்தவித முன்பணமும் பெறாமல் வழங்குகின்றனர். தினமும் கோழிக்குஞ்சுகளுக்கு தீவனம் வழங்குதல், சுத்தம் செய்தல் பணியை காலை, மாலை இரு வேளை, இரண்டு மணி நேரம் செலவழித்தால் போதும்.

ரூ.4 முதல் 5 வரை...

கோழிக் குஞ்சுகள் இரண்டு மாதத்தில் வளர்ந்து விடுகிறது. அவற்றை அதே நிறுவனங்களில் இருந்து வரும் வேன், லாரி போன்ற வாகனங்களில் எடுத்து செல்கின்றனர். மொத்தமாக எடை போட்டு ஒரு கிலோவுக்கு, 4 ரூபாய் முதல், 5 ரூபாய் வரை கூலியாக கொடுக்கின்றனர் என்றார்.

விவசாயம் செய்யும் நேரத்தில், கூடுதலாக தினமும் இரண்டு மணி நேரம் செலவழித்தால் போதும், இந்த பணம் கிடைக்கிறது. இதனால், விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் கூடாரம் அமைத்து, இறைச்சி கோழி வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## "டெல்டா' விவசாயிகளின் இன்றைய நிலை?

திருச்சி: டெல்டா விவசாயிகளின் நிலை குறித்து, திருச்சி மாவட்ட, தி.மு.க., விவசாய பிரிவு சார்பில், அவசர ஆலோசனைக் கூட்டம், வரும், 20ம் தேதி நடக்கிறது. கர்நாடகா அரசு கைவிரித்ததால், காவிரியில் தண்ணீர் திறக்கவில்லை. இதனால், மேட்டூர் அணையில் நீர் இல்லை. கடந்த ஆண்டு போதிய நீர் வரத்து இல்லாததால், டெல்டா விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். குறுவை, சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது. இதற்கிடையே, காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. இதற்காக தஞ்சாவூரில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு "டெல்டா' மாவட்ட விவசாயிகள் பாராட்டு விழா நடத்தினர். ஆனால், அரசிதழில் வெளியிடப்பட்டும், இதுவரை தண்ணீர் திறக்கவில்லை. ஜூன், 12ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, குறுவை சாகுபடி துவங்கியிருக்க வேண்டும். மேட்டூர் அணை வறண்டு கிடப்பதால், நடப்பாண்டு குறுவை, சம்பா சாகுபடி நடக்குமா? என்ற நிலை ஏற்பட்டுள்ளது. "குறுவை சாகுபடிக்காக, 12 மணி நேரம் மும்முனை மின்சாரம், இலவசமாக 180 மீட்டர் "ஓஸ்' பைப், உயிர் உரம் இலவசமாக வழங்கப்படும்' என தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். காவிரியில் நீர் இல்லை; நிலத்தடி நீர் இல்லாததால், இந்த அறிவிப்புகள் பெரிய அளவில் கைகொடுக்காது என விவசாயிகள் கூறுகின்றனர். தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், தி.மு.க., தலைவர் கருணாநிதிக்கும் இடையே டெல்டா விவசாயிகள் குறித்து நாள்தோறும் முற்றி வரும் கருத்து மோதல் அறிக்கைகள் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன. திருச்சி மாவட்ட தி.மு.க., விவசாய அணி சார்பில், இன்றைய "டெல்டா' விவசாயிகள் நிலை குறித்து, அவசர ஆலோசனைக் கூட்டம், 20ம் தேதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து திருச்சி மாவட்ட தி.மு.க., விவசாய அணி அமைப்பாளர் தர்மன் ராஜேந்திரன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருச்சி மாவட்ட விவசாய அணி ஒன்றிய, நகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம், 20ம் தேதி காலை, 10 மணிக்கு, கலைஞர் அறிவாலயத்தில் நடக்கிறது. மாவட்ட செயலாளர் நேரு தலைமை வகிக்கிறார். மாநில விவசாய அணி செயலாளரும், எம்.பி.,யுமான ராமலிங்கம் பங்கேற்று, காவிரி "டெல்டா' விவசாயிகளின் இன்றைய நிலை குறித்து அவசர ஆலோசனை நடத்துகிறார். கூட்டத்தில், திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க., விவசாய அணி நிர்வாகிகள் திரளாக பங்கேற்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தோட்டங்களில் போதிய ஈரமில்லை

கோத்தகிரி:கோத்தகிரி பகுதி தேயிலை தோட்டங்களில் போதிய ஈரம் இல்லாத நிலை தொடர்கிறது. நீலகிரியின் பல்வேறு பகுதிகளிலும் மழை தொடர்ந்து பெய்தாலும், கோத்தகிரி சுற்றுவட்டார பகுதியில் மழையின் அளவு வெகுவாக குறைந்துள்ளது.தற்போது, ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 18 ரூபாய்க்கும் குறையாமல் விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் தோட்டங்களுக்கு உரமிட்டு, பராமரிப்பதற்கு ஆர்வமாக உள்ளனர். ஆனால், தேயிலை தோட்டங்களில் ஈரப்பதம் குறைந்துள்ளதால், குறித்த நேரத்தில் உரமிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் மழையின் தாக்கம் அதிகரித்தால் மட்டுமே, வரும் நாட்களில் உரமிட முடியும். அதேவேளையில் எங்களுக்கு தேவையான உரம் வினியோகமும் அவசியம் என கோத்தகிரி சிறு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## மழை நீர் கால்வாய் அமைக்கமானியம் தந்தால் பயன்

கூடலூர்:"கூடலூர் பகுதி தேயிலை தோட்டங்களில் மழை நீர் சேமிப்பு கால்வாய் அமைக்க அரசு மானியம் வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது. கூடலூரில் தற்போது பருவ மழை தீவிரமடைந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட தண்ணீர் பிரச்னைகளை கருத்தில் கொண்டு, இங்குள்ள சில விவசாயிகள், தேயிலை தோட்டங்களில் மழை நீரை சேமிக்க துவங்கியுள்ளனர். இதற்காக தங்கள் தேயிலை தோட்டத்தில் 10 முதல் 15 அடி இடைவெளியில், ஒன்றரை அடி ஆழம் மற்றும் அகலத்தில், கால்வாய்களை ஒரு அடி இடைவெளி விட்டு தொடர்ச்சியாக அமைத்துள்ளனர்.

இதில், மழை நீரை சேமிப்பதால், நிலத்தடி நீர் உயர்வதுடன், மண் அரிப்பும் தடுக்க முடிகிறது. மேலும், கோடை காலத்திலும் சிக்கல் இருக்காது. இதேபோன்று,"அரசு தேயிலை தோட்டங்களிலும் மழை நீர் சேமிப்பு கால்வாய் அமைக்க அரசு மானியம் வழங்க வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கிராமப்புறங்களில் தேயிலை பறிப்பதில் மீண்டும் கத்தி : தரம் பாதிப்பால் விலை குறையும் அபாயம்

ஊட்டி:நீலகிரியில், தேயிலை மகசூல் அதிகரிக்க துவங்கியுள்ள நிலையில், விவசாயிகள் பலர், கத்தி மூலம், பசுந்தேயிலை பறிக்க துவங்கியுள்ளதால், தரம் பாதித்து, விலை குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் உட்பட பல இடங்களில், அதிகளவு தேயிலை பயிரிடப்படுகிறது. "தரமான பசுந்தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வரும் சூழ்நிலையில், இரு இலை, ஒரு கொழுந்துடன் கூடிய தரமான பசுந்தேயிலையை மட்டுமே பறித்து, உற்பத்திக்கு வழங்க வேண்டும்' என, தேயிலை வாரியம், "உபாசி' வேளாண் அறிவியல் நிலையம் உட்பட தேயிலை தொழில் சார்ந்த அமைப்புகள் அறிவுறுத்தி வருகின்றன.

மீண்டும் கத்தி கலாசாரம்

"தோட்டங்களில், பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்கும் போது, கத்தி பயன்படுத்துவதை தவிர்த்து, கத்தரி மற்றும் இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும்' என, தேயிலை வாரியம் அறிவுறுத்தி வருகிறது. மாவட்டத்தின் பல இடங்களில், தேயிலை தோட்டங்களுக்கு உகந்த நிலையில், மழை பெய்து வரும் நிலையில், பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்க துவங்கியுள்ளது. ஊட்டி அருகே அணிக்கொரை, தும்மனட்டி உட்பட பல இடங்களில், தேயிலை தோட்டங்களில் கத்தியை கொண்டு, விவசாயிகள் பலர் பசுந்தேயிலை பறிக்க துவங்கியுள்ளனர். "பசுந்தேயிலை பறிக்க ஆட் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது' என, விவசாயிகள் காரணம் கூறுகின்றனர். மாவட்டத்தில், மீண்டும் கத்தி கலாசாரம் தலைதூக்கியுள்ள நிலையில், தேயிலையின் தரம் முற்றிலுமாக பாதித்து, விலை குறையும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

செடிகள், செயல் இழக்கும்

"உபாசி' வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகள் கூறுகையில்,"ஆட் பற்றாக்குறையை காரணங்காட்டி, தும்மனட்டி உட்பட மாவட்டத்தின் சில இடங்களில் உள்ள விவசாயிகள், கத்தி மூலம் பசுந்தேயிலை பறிக்கின்றனர்; இதனால், தேயிலை செடிகளின் ஆரோக்கியம் பாதிக்கும். பலர் 3 மாதங்களுக்கு ஒரு முறை, பசுந்தேயிலையை பறிப்பதன் மூலம், அவற்றின் தரம் சரியான முறையில் இருக்காது. தவிர, தேயிலை செடிகள், விரைவில் தனது செயல் திறனை இழக்கும்.

தோட்டங்களில் ஆட் பற்றாக்குறையை சமாளிக்க, இயந்திரம், கத்தரி மூலம் பசுந்தேயிலை பறிக்கலாம். விவசாயிகள் பலர் கத்தியும், கத்தரியும் ஒன்று என,

நினைக்கின்றனர். கத்தியை பயன்படுத்துவதன் மூலம், தேயிலை செடியின் தாய் இலை பாதிக்கும்; கத்தரி பயன்படுத்தும் போது, தாய் இலை பாதிக்காது. பசுந்தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வரும் நிலையில், கத்தி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்' என்றனர்.

## பலத்த காற்றால் இலைகள் நாசம் வாழை விவசாயிகள் அதிருப்தி

ஈரோடு: ஈரோட்டில், மாலை நேரங்களில் வீசும் பலத்த காற்றால், வாழை இலைகள் நாசமாவதால், விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு, கோபி, பெருந்துறை, பவானி உள்பட பல பகுதிகளில், பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்படுகிறது. கதளி, நேந்திரம், ரொபஸ்டிரா, ரஸ்தாளி, மொந்தன், பச்சைநாடன், தேன் வாழை உள்ளிட்ட ரகங்கள் பயிரிடப்படுகின்றன.சில ஆண்டாக மஞ்சள் விலை ஏறுமுகமாக இருந்ததால், வாழை மற்றும் கரும்பினை விடுத்து, மஞ்சளை விவசாயிகள் பயிரிட்டதால், வாழை உற்பத்தி கணிசமாக குறைந்தது.நடப்பாண்டு துவக்கத்தில் மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால், மஞ்சளை கைவிட்டு, வாழை சாகுபடிக்கு விவசாயிகள் மாறினர். நடப்பாண்டு பயிரிடப்பட்ட வாழைப்பயிர் அறுவடை சீஸன் அனைத்து பகுதிகளிலும் மும்முரமாக நடந்து வருகிறது. கோடையில் வாழையின் வளர்ச்சி அபாரமாக இருப்பதால், வாழை சாகுபடியில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் ஈடுபட்டனர். இந்நிலையில், சில நாட்களாக ஈரோட்டில், மாலை நேரங்களில் பலத்த காற்று வீசி வருவதால், வாழை இலைகள் நாசமானது. இதுகுறித்து பரிசல்துறை விவசாயி ஆறுமுகம் கூறியதாவது: கோடையில் வாழை விளைச்சல் நன்றாக இருந்தது. வாழை இலை, வாழைக்காய்களை ஈரோடு மார்க்கெட்டில், மொத்த விலைக்கு விற்பனை செய்து வருகிறேன்.

சில நாட்களாக ஈரோட்டில் பலத்த காற்று வீசுவதால், வாழை இலைகள் கிழிந்து நாசமானதால், அவற்றை விற்க முடியாத நிலை ஏற்பட்டது. வாழை இலைகள் விற்பனை செய்ய முடியாததால், ஆயிரக்கணக்கில் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிப்படைந்த வாழை விவசாயிகளுக்கு, நஷ்டயீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## தொடரும் பருவமழை: ஆறுகளில் நீர் வரத்து அதிகரிப்பு

மார்த்தாண்டம் : குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் பருவமழையால், நீர்நிலைகள் நிரம்பி வருவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

கடந்த 2010ம் ஆண்டிற்கு பின், மழை மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, வெப்பத்தின் தாக்கம் மிகவும் அதிகரித்தே காணப்பட்டது. மேலும், மழையளவு குறைந்து வந்ததால், நீர்நிலைகளில் போதிய அளவு நீர் இல்லாத நிலை காணப்பட்டது. கோடையின் கோரப்பிடிக்கு, பெரும்பாலான ஆறு, குளம், கிணறுகள் போன்ற நீராதாரங்கள் வறண்டு போயின.

பல பகுதிகளில் குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வந்தது. உள்ளாட்சி அமைப்புகளும் சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்ய முடியாமல் திணறி வந்தன. வழக்கமாக மார்ச் மாதத்தில் மிதமாகவும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கடுமையான வெயிலும் நிலவும். ஜூன் மாதம் முதல் பருவமழை பொழிவது வழக்கம். இதன் மூலம் விவசாயம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிடும்.

கடந்த சில ஆண்டுகளாக, பருவமழை பொய்த்து விட்டது. ஆனால், வழக்கம் போல் வெயிலின் அளவு அதிகரித்தே காணப்பட்டது. அவ்வப்போது சில நாட்கள் மட்டுமே மழை பெய்தது. இதனால், கடந்த பிப்ரவரி மாதம் முதலே வெயிலின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்பட்டது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வெயில் தனது ருத்ர தாண்டவத்தை அரங்கேற்றியது. இதனால், மார்ச் மாதத்திலே நீர் நிலைகள் வறண்டு போயின.

வற்றாத ஜீவ நதி என்று அழைக்கப்படும் தாமிரபரணி ஆற்றின் நீர்மட்டம் கூட கிடு கிடுவென குறைந்து, அனைவரையும் கவலை கொள்ளச் செய்தது. மார்ச், ஏப்ரல் மாதத்திலேயே கொளுத்தும் வெயில், அக்கினி நட்சத்திர வேளையில் தமிழகம் முழுவதையும் வறுத்து எடுத்தது. ஆனால், குமரி மாவட்டத்தில் ஒரு சில நாட்கள் மழை பெய்தது. குறிப்பாக, கடந்த மாதத்தில், ஓரிரு நாட்கள் பெய்த மழையால் வெப்பம் ஓரளவு குறைந்தது.

இந்நிலையில், கடந்த பல தினங்களாக மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. பகல், இரவு வேறுபாடின்றி சாரல் மழை நீடித்து வருகிறது. சில நேரங்களில் கனமழையும் பெய்து வருகிறது. இதனால், காலநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும், குளிர்ந்த காற்றும் வீசி வருகிறது. வானம் மேக மூட்டமாகக் காட்சி அளிக்கிறது. மாவட்டத்தின் பல பகுதிகளில் அவ்வப்போது ‹றைக்காற்றும் வீசி வருகிறது. கடலோரப் பகுதிகளில் கடல் மிகவும் கொந்தளிப்பாக உள்ளது.

வழக்கத்திற்கு மாறாக, தற்போது பெரும் இரைச்சலுடன் கூடிய ‹றைக்காற்று வீசி கடல் சீற்றம் ஏற்பட்டு வருகிறது. மேலும், ராட்சத அலைகள் உருவாகி, கரையைத் தகர்த்து விடுவது போல மோதி வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன், மழையுடன் கூடிய

கடல் சீற்றத்தாலும், ‹றைக்காற்றினாலும், இரையுமன்துறை பகுதி வீடுகளில் உள்ள ஓடுகள் காற்றில் பறந்தன. பூத்துறையில் வீடுகள் பல இடிந்துள்ளன. இடப்பாடு பகுதியில் இருந்த ஐஸ் பிளாண்ட் கட்டடம் இடிந்துள்ளது. இடப்பாடு - வள்ளவிளை ரோட்டில், ததேயுபுரம் பகுதியில் ரோடு பெரிய அளவில் துண்டிக்கப்பட்டுள்ளது.
இடப்பாடு, ததேயுபுரம், வள்ளவிளை வரை கடற்கரையை ஒட்டியுள்ள ரோடு, அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் உள்ள மரங்களும் வேரோடு சாய்ந்து வருகின்றன. ராட்சத அலைகளின் கோரப்பிடியில் சிக்கி, மின்கம்பங்கள் பலவும் சாய்ந்து வருகின்றன. இதனால், அடிக்கடி மின்தடையும் ஏற்பட்டு வருகிறது. இதனால், இப்பகுதி பொதுமக்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.
மழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. இதுவரை 25 வீடுகள் மழையில் இடிந்து விழுந்துள்ளதாக வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மலையோரப் பகுதிகளிலும், அணைகளின் நீர்பிடிப்புப் பகுதிகளிலும் கனமழை பெய்து வருவதால், அணைகளில் நீர்மட்டம் கிடு, கிடுவென உயர்ந்து வருகிறது.
கடந்த சில ஆண்டுகளுக்கு பின், தற்போது தான் ஜூன் மாதத்தில் துவங்கிய மழை தொடர்ந்து பெய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. வெப்பத்தில் இருந்து விடுதலை தந்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயிகளும் குஷி அடைந்துள்ளனர். குடிநீர் தட்டுப்பாடு, விவசாயத் தேவைகளுக்கான நீர் மற்றும் வெப்பத்தில் இருந்து முழுமையான விடுதலை கிடைக்க, மழை மேலும் தொடர்ந்து பெய்ய வேண்டும் என்பதே அனைவரது விருப்பமாக உள்ளது.
நேற்று காலை பாலமோர் 22.8 மி.மீ., திருவட்டார் 23 மி.மீ., அடையாமடை 22 மி.மீ., கோழிப்போர்விளை 20 மி.மீ., திற்பரப்பு 13.4 மி.மீ., பேச்சிப்பாறையில் 8 மி.மீ., பெருஞ்சாணி 8.2 மி.மீ., சிற்றார் 24.6 மி.மீ., சுருளகோடு 15 மி.மீ., பூதப்பாண்டி 11 மி.மீ., நாகர்கோவில் 5.7 மி.மீ., மயிலாடி 8.2 மி.மீ., ஆரல்வாய்மொழி 0.6 மி.மீ., குளச்சல் 10 மி.மீ., இரணியல் 12.2 மி.மீ., குருந்தன்கோடு 7.5 மி.மீ., மழையும் பதிவாகி உள்ளது.
தொடர் மழையால் நீண்ட நாட்களுக்குப் பின், குழித்துறை தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. சப்பாத்திற்கு மேல் இரண்டு அடி உயரத்திற்கு தண்ணீர் பாய்ந்து செல்கிறது. இதனால், சப்பாத்து வழியாக பைக்கில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும், பைக்குகளில் சிலர் ஆபத்தான பயணத்தை இந்த சப்பாத்து வழியாக தற்போதும் நடத்தி வருகின்றனர்.

குழித்துறை அட்டைகுளம், மருதங்கோடு குளம், நட்டாலம் குளம் போன்றவை நிரம்பி வருகின்றன. இதேபோல, வறண்ட நிலையில் காணப்பட்ட கிணறுகளிலும் நீரூற்று அதிகரித்து வருகிறது. தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் ஓரளவு பாதிக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் வருவாய் ஈட்டும் முக்கியத் தொழிலான ரப்பர்பால் வடிப்புத் தொழில் கடந்த சில நாட்களாகவே தொடர்ச்சியாகச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், தொழிலாளர்களும், சிறு ரப்பர் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோல, பெரும்பாலான மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் செங்கல் தொழிலும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளது. செங்கல் செய்வதற்கு மண் எடுக்க முடியாமலும், செங்கல்கள் செய்து உலர வைக்க முடியாமலும் தொழிலாளர்கள் சிரமப்படுகின்றனர். திக்குறிச்சி, அருமனை, ஞாறாம்விளை, திருவட்டார், கண்டன்விளை, தோவாளை உட்பட மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் செங்கல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மழையால் கட்டுமானப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் பெரும்பாலான ரோடுகள் போக்குவரத்திற்கு பயனில்லாத வகையில் பழுதடைந்துள்ளது. குமரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையும் பல பகுதிகளில் சேதமடைந்து வருகிறது. கொட்டும் மழை காரணமாக, பஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பல பஸ்கள் குறிப்பிட்ட நேரத்தில் இயங்காமல் காலதாமாதமாகச் சென்று வருகின்றன. குறிப்பாக, இரவு நேரங்களில் மலையோர பகுதிகளுக்கு இயங்கும் பஸ்கள் சுமார் ஒரு மணி நேரம் வரை காலதாமதமாக இயங்குகிறது. இதனால், பயணிகள் கொட்டும் மழையில் நனைந்தவாறு, இரவு நேரங்களில் நீண்டநேரம் பஸ்சிற்காக காத்திருக்கும் ‹ழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மார்த்தாண்டத்திலுள்ள தற்காலிக பஸ் ஸ்டாண்டுகளில் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லை. மழை பெய்யும் போது ஒதுங்கி நிற்பதற்குக் கூட நிழலகங்கள் கிடையாது. லாரிப்பேட்டையில் சுகாதாரக்கேடுகளுடன் தேங்கி நிற்கும் மழைநீர் பயணிகளை பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கி வருகிறது.

மாவட்டத்தின் பல இடங்களில் வடிகால்கள் பராமரிக்கப்படாததால, மழைநீர் பல இடங்களிலும் தேங்கி நிற்கிறது. இதனால், கொசுக்கள் உற்பத்தியாகி தெற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## கரும்பு விவசாயிகளின் கிரைய தொகை ஒப்புதல் ரூ.24 கோடி ஜூன் இறுதிக்குள் தரப்படும்

சிவகங்கை:""கரும்பு விவசாயிகளுக்கான பாக்கித்தொகை, ரூ.24 கோடி ஜூன் இறுதிக்குள் வழங்கப்படும்," என, சக்தி சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனர் மாணிக்கம் தெரிவித்தார்.

சிவகங்கையில்,கரும்பு விவசாயிகள் சர்க்கரை ஆலைக்கு வழங்கிய கரும்புக்கான தொகை, விவசாயிகள் வங்கியில் பெற்ற கடனுக்காக ஆலை நிர்வாகம் செலுத்த வேண்டிய தொகை உட்பட ரூ.72 கோடி வரை பாக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் வங்கிகளில் விவசாயிகளுக்கு, பயிர்கடன் வழங்க மறுப்பதாக கூறி, கடந்த வாரம் விவசாயிகள் கலெக்டரிடம் முறையிட்டனர். அதில்,சக்தி சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனர், நேரடியாக வந்து அறிவித்தால் மட்டுமே அடுத்த கட்ட போராட்டத்தை கைவிடுவோம் என தெரிவித்தனர்.

நேற்று கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் ராஜாராமன் தலைமையில், கரும்பு விவசாயிகள், சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், வங்கியாளர்களின் கூட்டம் நடந்தது. சக்தி சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனர் மாணிக்கம், மற்றும் அதிகாரிகள்,விவசாய இணை இயக்குனர் செல்லத்துரை,மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் யசோதாதேவி, மேலாளர்கள் ஸ்டேட் பாங்க் ரவிராம், ஐ.ஓ.பி., கருணாகரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஆதிமூலம், கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் மாணிக்கம், செயலாளர் ரகுநாதன், உடையப்பன் பங்கேற்றனர்.

ஆலை நிர்வாக இயக்குனர் கூறுகையில்,""கூட்டத்தில் பேசியபடி, ஜூன் 30க்குள் கரும்பு விவசாயிகளுக்கான பாக்கி தொகை ரூ.24 கோடி வழங்கப்படும். கூட்டுறவு வங்கிகளில் சென்ற ஆண்டிற்கான நிலுவை தொகையை செலுத்தி விட்டதால், நடப்பாண்டு கரும்பு விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவதாக, கூட்டுறவு வங்கி தனி அலுவலர் சம்மதம் தெரிவித்துள்ளார். நடப்பு ஆண்டு (2013-14) முதல், கரும்பு கிரைய தொகை, வங்கி கடன்களை ஆலை நிர்வாகம் செலுத்தி விடும். தற்போது, ஆலை மூலம், 4.37 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்து வருகிறோம். அடுத்த 2 ஆண்டுகளில் நவீன இயந்திரங்களை பயன்படுத்தி, 8 லட்சம் கரும்பு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம். இவை அனைத்தும், விவசாயிகளின் ஒத்துழைப்பால் நடக்கிறது," என்றார்.

## 2,000 ஏக்கர் பருத்தி பாதிப்பு தத்தளிக்கும் முதுகுளத்தூர் விவசாயிகள்

முதுகுளத்தூர்:முதுகுளத்தூர் பகுதியில், போதிய மழையின்றி, 2,000 ஏக்கர் பருத்தி விவசாயம் பாதிக்கபட்டு, விவசாயிகள் கடனில் மூழ்கியுள்ளனர்.

பருவமழை பொய்ப்பால் நெல், மிளகாய் சாகுபடியில் இழப்பை சந்தித்த விவசாயிகள், அரசின் உதவியை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இந்நிலையில் சில மாதங்களுக்கு முன் பெய்த சிறுமழையை நம்பி முதுகுளத்தூர், ஆணைசேரி, கீழத்தூவல், காக்கூர், புளியங்குடி, பொன்னக்கனேரி, தாழியரேந்தல், உலையூர் உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில், 2,000 ஏக்கருக்கும் அதிகமாக பருத்தி சாகுபடி செய்தனர்.
தொடர்ந்து மழையின்றி மகசூல் கிடைக்கும் பருவத்தில் பருத்தி காய்கள் கருகி வருகின்றன. கடன் வாங்கி ஏற்கனவே நெல், மிளகாய் விவசாயத்தில், இழப்பை சந்தித்த விவசாயிகள், மேலும் கடனில் மூழ்கியுள்ளனர்.
இதுகுறித்து காக்கூர் விவசாயி பொன்னுச்சாமி கூறுகையில், ""பருத்தியை, ஆழ்குழாய் கிணறுகளில் கிடைக்கும் தண்ணீரை பாய்ச்சி, காப்பாற்றலாம் என்றால், விவசாயத்திற்காக 8 மணி நேரம் வழங்கபட்ட மின்சாரம், 3 மணி நேரமாக குறைக்கபட்டுள்ளது. இதுவும் முழுமையாக கிடைக்காததால், பருத்தி பாழாய் போனது. பருத்திக்கும் அரசு, நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார்.

## வேதையில் தென்னை சாகுபடி கருத்தரங்கம்

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த கத்திரிப்புலத்தில், மாரியம்மன் கோவில் வளாகத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில் தென்னை சாகுபடி பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கம் நடந்தது. இதில், நாகை கலெக்டர் முனுசாமி தலைமை வகித்து, தென்னை சாகுபடி தொழில்நுட்ப கையேட்டை வெளியிட்டார். சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் ராஜேந்திரன் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி விழாவை துவக்கி வைத்து பேசினார். இந்நிகழ்ச்சியில், வேதாரண்யம் பஞ்., யூனியன் தலைவர் சுசீலாதேவி, நாகை மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் ராஜேந்திரன், சென்னை தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர் பரமசிவம், முன்னோடி விவசாயிகள் சாம்பசிவம், வீரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தென்னை சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்து பெங்களூரு இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக முதன்மை விஞ்ஞானி சாய்ராம், வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் விஜய செல்வராஜ் உள்ளிட்டோர் விளக்கம் அளித்தனர். வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் மோகன்தாஸ் நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.06.2013 A.M**

---

## நீலகிரி, கேரளாவில் கனமழை பவானிசாகர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது

ஈரோடு, : நீலகிரி மற்றும் கேரளாவில் பெய்து வரும் கனமழையால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 3 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. நேற்று ஒரேநாளில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கடந்த 4 நாட்களுக்கு முன்பு 35 அடியாக இருந்தது. நேற்று முன்தினம் வரை பில்லூர் அணையிலிருந்து பவானி ஆற்றில் திறக்கப்பட்ட தண்ணீரால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வந்தது. இதன் காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் வரை 2 அடி உயர்ந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 37.50 அடியாக இருந்தது. இந்நிலையில் நீலகிரி மாவட்டத்திலும், கேரளாவிலும் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால் நேற்று அணைக்கு பவானி ஆற்றின் வழியாகவும், மோயாறு பள்ளத்தாக்கு வழியாகவும் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு 3078 கனஅடி நீர்வரத்து இருந்தது. தொடர்ந்து நீலகிரியில் பெய்த மழையால் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்ததால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்தது. நேற்று இரவு 8 மணி நிலவரப்படி அணைக்கு 3271 கனஅடி நீர்வரத்து இருந்தது. நீர்வரத்து அதிகரித்ததால் நேற்று இரவு 8 மணிக்கு அணையின் நீர்மட்டம் 39.75 அடியாக உயர்ந்தது. நேற்று ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது.

கடந்த 4 நாட்களில் அணையின் நீர்மட்டம் 4 அடியாக அதிகரித்திருப்பது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அவல்பூந்துறையில் 'நேபட்' மூலம் கொப்பரை கொள்முதல் துவக்கம் கிலோ ரூ52.50ஆக விலை நிர்ணயம்

ஈரோடு, : கடந்த சில வாரங்களாக கொப்பரை விலை கடும் வீழ்ச்சியடைந்து வருவதால் தென்னை விவசாயிகள் கடும் பாதிப்படைந்துள்ளனர்.

கொப்பரைக்கு கட்டுபடியான விலை இல்லாததால் தனியார் மூலம் கொள்முதல் செய்யப்படும் ஒரு கிலோ கொப்பரையின் விலை ரூ.40க்கும் குறைவாக விற்பனையாகி வந்தது. ஒரு கிலோ கொப்பரையை உருவாக்க ரூ.50 வரை செலவாகும் நிலையில் ரூ.40க்கும் குறைவான விலையில் தனியாரால் கொள்முதல் செய்யப்பட்டு வந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ''நேபட்'' (தேசிய வேளாண் விளைபொருள் நிர்ணய குழு) மூலமாக அரசே கொப்பரை கொள்முதல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர்.

இதை ஏற்று சமீபத்தில் 'நேபட்' மூலமாக கொப்பரை செய்ய அரசு முன்வந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் அவல்பூந்துறை அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மட்டும் கொப்பரை கொள்முதல் துவங்கப்பட்டுள்ளது. நேபட் மூலமாக ஒரு கிலோ கொப்பரை தேங்காய் ரூ.52.50 வீதம் கொள்முதல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொப்பரை தேங்காய் கொள்முதல் ஆதார விலை திட்ட தொடக்க விழா அவல்பூந்துறையில் நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் சண்முகம் தலை மை வகித்தார். கொப்பரை தேங்காய் கொள்முதல் ஆதார விலைத்திட்டத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் துவக்கி வைத்து பேசுகையில், 'விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையை அறிவித்து விவசாயிகளின் உற்பத்தி பொருட்களை அரசு மூலம் கொள்முதல் செய்கிறது. அதன்படி அரசு கொப்பரை தேங்காய்க்கு நிர்ணயித்துள்ள விலையான ரூ.52.50க்கு நேபட் மூலமாக அவல்பூந்துறை அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரத்திற்கு 2 நாட்கள் கொள்முதல் செய்யப்படும்,' என்றார்.

வருவாய்துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் பேசுகையில், 'தமிழகத்தில் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை பொய்த்த காரணத்தால் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியாக

டெல்டா மாவட்டங்களுக்கு ரூ.524 கோடியும், இதர மாவட்டங்களுக்கு ரூ.756 கோடியும் என மொத்தம் ரூ.3881 கோடிக்கு தமிழக அரசால் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இதேபோல வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னைக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட எந்த விவசாயிக்கும் நிவாரணம் வழங்கப்படாத நிலையில் நிவாரணம் வழங்கிய ஒரே மாநிலம் தமிழகம் மட்டும் தான். இவ்வாறு தோப்பு வெங்கடாசலம் பேசினார்.

விழாவில் ஈரோடு மாநகராட்சி மேயர் மல்லிகாபரமசிவம், மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ், வேளாண்துறை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சூறாவளியுடன் சாரல் மழை தேயிலை விவசாயம் சுறுசுறுப்பு

மஞ்சூர், : நீலகிரி மாவட்டத்தில் சூறாவளியுடன் சாரல் மழை நீடிக்கிறது. இதனால் தேயிலை விவசாயத்தில் விவசாயிகள் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டம் குந்தா பகுதியில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்நிலையில், இப்பகுதியில் கடந்த பல மாதங்களாக போதிய மழை பொழிவு இல்லாததால் கடும் வறட்சி ஏற்பட்டது.

வறட்சியின் தாக்கத்தால் தேயிலை விவசாயம் பாதிக்கப்பட்டு பசுந்தேயிலை வரத்து பெருமளவு குறைந்து போனது. இதனால் குந்தா பகுதியில் உள்ள கூட்டுறவு மற்றும் தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை துூள் உற்பத்தியும் வெகுவாக பாதித்தது. இந்நிலையில் தென் மேற்கு பருவ மழை துவங்கியதையடுத்து கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நீண்ட இடைவெளிக்கு பின் பெய்து வரும் மழையால் வறட்சியின் தாக்கம் அடியோடு குறைந்துள்ளது. இதனால் தேயிலை விவசாயம் மீண்டும் சுறு,சுறுப்படைந்துள்ளது.

தொடர் மழையால் மகிழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களில் உரமிடுதல் மற்றும் பராமரிப்பு பணி களில் தீவிரமாக ஈடுபட்டு

வருகின்றார்கள்.

குந்தா பகுதியானது கேரள மாநில எல்லையை ஒட்டியுள்ளதால் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளதுடன் பலத்த சூறாவளி காற்றும் வீசி வருகிறது. அப்பர்பவானி, அவலாஞ்சி, கோரகுந்தா உள்ளிட்ட பகுதிகளில் பலத்த சூறாவளி காற்றுடன் பெய்து வரும் கன மழையில் சாலையோரங்கள் மற்றும் தேயிலை தோட்டங்கள், வன பகுதிகளில் மரங்கள் வேறோடு சாய்ந்து விழுவது அதிகரித்துள் ளது.

மேலும் சூறாவளி காற்றில் மின் கம்பங்களின் மீது மரங்கள்
விழுவதால் கம்பிகள் அறுந்து அடிக்கடி மின் வினியோகம் துண்டிக்கப்பட்டு வருகிறது. பகல் நேரங்களில் இடைவிடாத மழையுடன் வீசி வரும் காற்றின் காரணமாக கடுங்குளிர் நிலவுவதால் கடை வீதிகள், பஜார் பகுதிகளில் பொது மக்கள் கூட்டம் பெருமளவு குறைந்துள்ளது. அதேபோல் சுற்றுலா பகுதிகளிலும் கூட்டம் குறைவாக காணப்பட்டது. நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில் அதிக பட்சமாக மஞ்சூர் அருகே உள்ள அவலாஞ்சி பகுதியில் 91 மி.மீ மழை பதிவாகியுள்ளது. பிற இடங்களில் பெய்த மழை விவரம் வருமாறு, முக்குறுத்தி&90 மி.மீ, தேவாலா&53, போர்த்திமந்து&43.6, பார்ஸன்ஸ்வேலி&36, நடுவட் டம்&32, கிளன்மார்கன்&26, அப்பர்பவாணி&20, எமரால்டு&15.4, பைக்காரா&15, சிங்காரா&14, சாண்டிநல்லா&7, ஊட்டி&6, குந்தா&4.5, கேத்தி&3, மரவகண்டி&2.5, கெத்தை&2, கல்லட்டி&2, கோத்தகிரி&1.5 மி.மீ மழைபெய்தது.

இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஊட்டியில் கடும் குளிர் நிலவி வருவதால் எப்போதும் பரபரப்பாக காணப்படும் கமர்சியல் சாலை, எட்டின்ஸ் சாலை போன்றவற்றில் சுற்றுலா பயணிகள், உள்ளூர் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமின்றி வெறிச்சோடி காணப்பட்டது. மேலும் தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, படகு இல்லம், தேனிலவு படகு இல்லம் போன்ற சுற்றுலா தளங்களிலும் கடும் குளிர் காரணமாக சுற்றுலா பயணிகளின் கூட்டம் குறைவாகவே காணப்பட்டது. தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் நகரில் குளிர் தாக்கம் அதிகரித்துள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாக அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் கடும் குளிர் நிலவி வருகிறது. ஊட்டியில் நேற்று

அதிகபட்சமாக 18 டிகிரி செல்சியசும், குறைந்தபட்சமாக 9 டிகிரி செல்சியசும் வெப்பநிலை நிலவியது.

## குமரியில் தொடர் மழை வேகமாக நிரம்பும் கோதையாறு அணை தடையின்றி மின்உற்பத்திக்கு வழி பிறந்தது

குலசேகரம், :

குமரி மாவட்டத்தில் பெய்யும் தொடர் மழை காரணமாக 110 அடி உயரமுடைய கோதையாறு அணை வேகமாக நிரம்பி வருகிறது. இதனால் தடையின்றி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தென்மேற்கு பருவமழையும், வடகிழக்கு பருவமழையும் போக்கு காட்டியதால் வரலாறு காணாத வறட்சியால் குமரிமாவட்டம் தத்தளித்தது. ஆறு, ஏரி, குளங்கள் போன்ற நீர்நிலைகள் வறண்டன. நிலத்தடி நீரின் அளவும் குறைந்து போனது. இதனால் பொதுமக்கள் குடிநீருக்காக அல்லல்பட்டு வந்தனர். இந்த ஆண்டு கன்னிப்பூ சாகுபடிக்கு அணைகளில் நீர்மட்டம் போதுமானதாக இல்லாததால் சாகுபடி நடைபெறுமா என்பது கேள்விக்குறியாக இருந்தது.

கோதையாறில் மின்உற்பத்திக்கு பயன்பட்டுவரும் அப்பர் கோதையாறு அணை, சின்ன குற்றியாறு அணை, கோதையாறு அணை போன்ற அணைகளின் நீர்மட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக உற்பத்திக்கு போதுமானதாக இல்லாதிருந்ததால் கோதையாறிலுள்ள நீர்மின் நிலையங்கள் இடைவெளிவிட்டு இயக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்த ஆண்டாவது பருவ மழை கைகொடுக்குமா என்று விவசாயிகள் ஏக்கத்துடன் காத்திருந்தனர். அணைகளில் தண்ணீர் குறைவாக இருந்தாலும், பருவமழை தொடர்ந்து பொய்த்து வந்ததால் அதன் மேல் நம்பிக்கையில்லாததாலும் வழக்கத்தை விட குறைவான அளவிலேயே விவசாயிகள் சாகுபடியை துவங்கினர். ஆனால் இந்த ஆண்டு பருவமழை சரியான நேரத்தில் துவங்கியது. துவங்கியது முதல் கடந்த இரண்டு வார காலமாக சாரல்மழை, கனமழை என தொடர்ச்சியாக அடைமழையாக பெய்து வருகிறது. நீர்நிலைகளுக்கு தண்ணீர் வருகை அதிகரித்துள்ளதால் வறண்டு போன குளங்கள் நிரம்பி வருகின்றன. இதனால் இந்த ஆண்டு விவசாயம் செழிக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகள்

மத்தியில் எழுந்துள்ளது. இதேப்போன்று மின் உற்பத்திக்காக கட்டப்பட்டுள்ள கோதையாறிலுள்ள அணைகள் அனைத்திற்கும் தண்ணீர் வருகை அதிகரித்துள்ளது. மழையின் அளவு இதேப்போன்று மேலும் இரண்டு வாரகாலம் நீடித்தால் இந்த அணைகள் முழுகொள்ளளவை எட்டும் நிலைக்கு வந்துவிடும். அணைகள் நிரம்பினால் இந்த ஆண்டு தடையின்றி மின்உற்பத்தி இருக்கும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## குமரியில் பருவமழை தீவிரம் பேச்சிப்பாறை அணை 21 அடியாக உயர்வு

நாகர்கோவில், :

குமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென்று உயர்ந்து வருகிறது.

குமரி மாவட்டத்தில் கடந்த மே மாத இறுதியில் இருந்து மழை பெய்து வருகிறது. அவ்வப்போது பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. மலை யோர பகுதிகள், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் மழை காணப்படுகிறது. இதனால் நீர்நிலைகளில் தண்ணீர் மட்டம் உயர்ந்து வருகிறது. வறண்டு காணப்பட்ட குளங்களில் தண்ணீர் தேங்க தொடங்கியுள்ளது. சூறைக்காற்றுடன் பெய்து வருகின்ற மழை காரணமாக மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. தொடர் மழையால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 21.70 அடியாக இருந்தது. அணைக்கு 884 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 44.10 அடியாக இருந்தது. அணைக்கு 1,129 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது. சிற்றார்&1ல் 5.67 அடியும், சிற்றார்&2ல் 5.77 அடியும், பொய்கையில் மைனஸ் 0.50 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 7.87 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. கடந்த 15 நாட்கள் இடைவெளியில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றும் சாரல் மழை பெய்தவண்ணம் இருந்தது. விடாது பெய்து வருகின்ற மழையால் மாவட்டத்தில் குளுகுளு காலநிலை நிலவியது. நேற்று காலை வரை பேச்சிப்பாறையில் 8, பெருஞ்சாணியில் 8.2, சிற்றார்&1ல் 22.2, சிற்றார்&2ல் 24.6, பொய்கையில் 0.6,

மாம்பழத்துறையாறு அணையில் 21 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது. மேலும் நாகர்கோவில் 5.7, பூதப்பாண்டி 11, சுருளோடு 15, ஆரல்வாய்மொழி 0.6, பாலமோர் 22.8, மயிலாடி 8.2, கொட்டாரம் 5.8, இரணியல் 12.2, ஆனைக்கிடங்கு 22, குளச்சல் 10, குருந்தன்கோடு 7.4, அடையாமடை 22, கோழிப்போர்விளை 20, திருவட்டார் 23, புத்தன் அணை 7.8, திற்பரப்பு 13.4 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது.

## கேரளாவில் பருவமழை தீவிரம் அணைகளில் நீர்மட்டம் உயர்வு




திருவனந்தபுரம்: கேரளாவில் பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் அணைகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. சபரிமலை சென்று திரும்பிய பக்தர்கள் கார் மீது மரம் விழுந்ததில் 3 பேர் காயமடைந்தனர்.கேரளாவில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தலைநகரம் திருவனந்தபுரம் முதல் வட மாவட்டமான காசர்கோடு வரை அனைத்து மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் பம்பை, பெரியாறு உள்பட அனைத்து ஆறுகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இடுக்கி அணையில் நீர் மட்டம் உயர்ந்து வருவதால் நீர்மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது.திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா உள்பட பல்வேறு மாவட்டங்களில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்று காலை 8 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் கண்ணூர், இரிக்கூர் ஆகிய இடங்களில் அதிக பட்சமாக 18 செ.மீ மழை பெய்துள்ளது. எர்ணாகுளம் மாவட்டம் பிரவத்தில் 14 செ.மீ, வடகரை, குன்னங்குளம் பகுதியில் தலா 12 செ.மீ., கோழிக்கோடு 11 செ.மீ, திருவனந்தபுரம் 2 செ.மீ, வர்க்கலா 5 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

சபரிமலையிலும் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. ஆனி மாத

பிறப்பையொட்டி கோயில் நடை திறந்திருப்பதால் கன மழையையும் பொருட்படுத்தாமல் அங்கு பக்தர்கள் குவிந்து வருகின்றனர். திருவனந்தபுரத்தை சேர்ந்த  புவனேந்திரன்(52), இவரது உறவினர்கள் பாலச்சந்திரன்(60), ரமேஷ்குமார்(47) ஆகியோர் நேற்று முன்தினம் சபரிமலை சென்றுவிட்டு காரில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர்.நிலக்கல் அருகே செல்லும்போது தொடர் மழை காரணமாக மரம் வேருடன் சாய்ந்து கார் மீது விழுந்தது. இதில் காரில் இருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடினர். இதை பார்த்த அங்கிருந்தவர்கள் மற்றும் வனத்துறையினர் காயமடைந்தவர்களை  மீட்டு பத்தினம்திட்டா அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். விபத்து காரணமாக நிலக்கல்& சபரிமலை சாலையில் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தீயணைப்பு படையினர் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீரமைத்தனர்

## ஒருபக்கம் சாரல், மறுபக்கம் வறட்சி நெல்லை, தூத்துக்குடியில் நிலத்தடி நீர்மட்டம் சரிவு



நெல்லை: நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தின் பல பகுதிகளில் நீண்ட நாட்களாக மழை பொழியாததால், நிலத்தடி நீர்மட்டம் கடும் சரிவை சந்தித்து வருகிறது. வறட்சி பாதித்த பகுதிகளில் 400 அடி போர் போட்டாலும் தண்ணீர் இல்லை என்ற நிலை காணப்படுகிறது.நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த சில ஆண்டுகளாகவே பருவமழை சரியாக பெய்யவில்லை. இரு மாவட்டங்களிலும் எப்போதுமே ஏப்ரல், மே மாதங்களில்தான் 100 டிகிரியை தாண்டி வெயில் அடிப்ப துண்டு. இந்த ஆண்டு அக்னி நட்சத்திரம் துவங்கும் முன்பே பொதுமக்களை வெயில் வாட்டி வதைத்தது. இரு மாவட்டங்களிலும் கார், பிசானம் ஆகிய இரு சாகுபடிகளுமே பொய்த்து போனது. இதனால் பல இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் கடும் சரிவை சந்தித்தது. வறட்சி பாதித்த இடங்களில் 400 அடிக்கு கீழே போர் போட்டாலும் தண்ணீர் இருப்பதில்லை.

திசையன்விளை, ராதாபுரம், சாத்தான்குளம், முனைஞ்சிப்பட்டி துவங்கி நெல்லை மாவட்டத்தின் வறட்சிக்கே உதாரணமாக திகழும் மானூர், வல்லவன்கோட்டை வரை தண்ணீர் பற்றாக்குறை கடுமையாக உள்ளது.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஆறு, கால்வாய், குளங்களில் தண்ணீர் இல்லாபோது கிணறுகள் பெரும்பாலும் விவசாயிகளுக்கு கைகொடுப்பதுண்டு. ஆனால், இந்த ஆண்டு கிணறுகளிலும் ஆழ்துளை குழாய் பொருத்தி போர் போட்டாலும் தண்ணீர் இல்லை. பல பகுதிகளில் 80 அடி ஆழமுள்ள கிணறுகளில் கூட ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லை என்ற சோகம் விவசாயிகளை கவலையடைய வைத்துள்ளது. விவசாயிகள் கிணற்றை தூர்வாரி போர் போட்டாலும், நிலத்தடி நீர் பற்றாக்குறையால் தண்ணீர் கிடைப்பதில்லை.இது குறித்து எட்டாங்குளத்தை சேர்ந்த விவசாயி சிவன் கூறுகையில், ‘‘அபிஷேகப்பட்டி, வல்லவன்கோட்டை, எட்டாங்குளம் பகுதியில் தற்போது நிலத்தடி நீர் சுத்தமாக இல்லை. எங்கள் பகுதி வயல்களில் பயிரிட்டுள்ள மிளகாய் வற்றல், பல்லாரி, வெண்டை, புடலை ஆகிய பயிர்களுக்கு வாரம் ஒரு முறை தண்ணீர் கிடைத் தால் கூட கருகாமல் தப்பிவிடும். ஆனால், கிணற்றில் எவ்வளவு ஆழத்திற்கு போர் போட்டாலும் தண்ணீர் இல்லை. இதனால் எங்கள் பகுதியில் காணப்படும் எள், சோளநாற்று பயிர்கள் கருகி வருகின்றனÓ என்றார்.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வறட்சியின் தாக்கத்தால் குடிநீர் தட்டுப்பாடும் தலை விரித்தாடுகிறது. ஆற்று நீர் இணைப்புகள் பெற்ற கிராமங்களுக்கு வாரம் ஒருமுறை தண்ணீர் கிடைப்பதே அரிதாக உள்ளது. கிணறுகள், குளம், குட்டைகள் என யாவுமே வறண்டு கிடப்பதால் ஒருசில கிராமங்களில் அவசர தேவைக்கு பயன்படுத்தக்கூட தண்ணீர் இல்லை.இரு மாவட்ட மக்களுக்கும் பெரிய ஆறுதலாக இருப்பது, தற்போது முறையாக துவங்கி பெய்து வரும் சாரல் மழைதான். இந்த மழையால் அணைப்பகுதிகள் அதிகளவில் பயன் அடைந்து வருகிறது. கிணற்று, குளத்து பாசனங்களுக்கு பெரிய அளவில் பலன் இல்லை. அணைகளின் தண்ணீர் திறப்பை பொறுத்தே கார் சாகுபடி அமையும் என விவசாயிகள் எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கின்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

18.06.2013 A.M

## ஏப்ரல் மாதத்தில் தேயிலை உற்பத்தி 6 சதவீதம் வளர்ச்சி



ஏப்ரல் மாதத்தில் நாட்டின் தேயிலை உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து 7.51 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 7.10 கோடி கிலோவாக இருந்தது. அசாம் மற்றும் கேரளா மாநிலங்களில் உற்பத்தி அதிகரித்துள்ளதால் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதாக தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வட பகுதியில்தான் தேயிலை உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகிறது. மொத்த தேயிலை உற்பத்தியில் இப்பகுதியின் பங்களிப்பு 80 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. அசாம் மாநிலத்தில் தேயிலை உற்பத்தி 16 சதவீதம் அதிகரித்து 4.18 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. கேரளாவின் தேயிலை உற்பத்தி 40 சதவீதம் அதிகரித்து 37 லட்சம் கிலோவிலிருந்து 51.5 லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது.

அதேசமயம், மேற்கு வங்காளத்தில் தேயிலை உற்பத்தி 4.58 சதவீதம் குறைந்து 1.17 கோடி கிலோவாக குறைந்துள்ளது. தமிழ்நாட்டின் தேயிலை உற்பத்தி 18.35 சதவீதம் குறைந்து 1.46 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

சென்ற நிதி ஆண்டில் தேயிலை உற்பத்தி முந்தைய ஆண்டை (2011–12) விட 3.6 சதவீதம் அதிகரித்து 113.51 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. மேலும், 22 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.